ISSN 1391-9504

Rs.25.00

# Vijey விஜய்
# விஜய்

29.04.2009 - மலர் 06, இதழ் 08



## பகலிலும் இருள் சூழப்போகும் நாடுகள்



## 'FIFA' கால்பந்தாட்ட சம்மேளனம்



## இந்திய தேர்தல்; ஒரு கண்ணோட்டம்




## மேதினம் உருவான வரலாறு

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் முதல் ஆயுதம்



மனிதனின் முதல் ஆயுதம் எதுவென்று ஆராய்வோமானால் பல நூற்றாண்டு காலம் பின்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. அது கி.மு சுமார் 4 ஆம் நூற்றாண்டு காலப்பகுதி. அக்காலப்பகுதியில் ஆதிமனிதன் உபயோகித்த முதலாவது ஆயுதம் சுத்தியல் என்று தெரியவருகிறது. சுத்தியல் என்றால் அது உருக்கினாலோ இரும்பினாலோ அல்லது வேறு எந்த உலோகத்தினாலோ செய்தது அல்ல. ஆரம்பத்தில் சுத்தியலாக கல்லைத்தான் மனிதன் உபயோகித்துள்ளான்.

மனிதனின் முதலாவது ஆயுதம் எதுவென்று ஆராய முற்பட்டபோது கிடைத்த தகவல் ஒன்றை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. அதாவது, சுத்தியலும் குறடும்தான் மூலப் பொருட்களான ஆயுதங்கள். இந்த ஆயுதங்கள் இல்லாமல் ஏனைய ஆயுதங்களை உருவாக்க முடியாது. அப்படியானால் இந்த இரண்டு ஆயுதங்களும் எப்படி உருவாகின?

சுத்தியல் ஒன்றும் குறடு ஒன்றும் உருவாக வேண்டும் என்று பிரார்த்தனை செய்யப்பட்டதாம். அதன்படி அவை இரண்டும் உருவாகினவாம். அவற்றைக் கொண்டு ஏனைய ஆயுதங்கள் உருவாக்கப்பட்டன என்று அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டது. அறிவியல் ரீதியில் நோக்குகையில் இந்தத் தகவல் நம்பக்கூடியதாக இல்லை.

ஆய்வு ரீதியில் பார்க்கையில் மனிதன் உபயோகித்த முதல் ஆயுதம் கல் என்று தெரிகிறது. கல்லைத்தான் மனிதன் பல நூற்றாண்டு காலம் சுத்தியலாக உபயோகித்துள்ளான். கையில் மிகுந்த வலியையும் காயங்களையும் ஏற்படுத்தக்கூடிய இந்த கல் சுத்தியலை உபயோகித்து வருகையில் படிப்படியாக அதில் மரக் கைப்பிடியொன்றைப்



போட்டுள்ளான்.

மரக் கைப்பிடியில் கல்லைக் கட்டியே சுத்தியலாக உபயோகித்துள்ளான். இதுதான் முதலாவது சுத்தியல் பிறந்த கதை. சுத்தியலைக் கட்டுவதற்கு சக்திமிக்க கொடிகள், மரப்பட்டைகள் என்பவற்றையே மனிதன் பயன்படுத்தியுள்ளான். படிப்படியாக இந்த முறையும் மாறி கல்லில் துளை போடப்பட்டு கைப்பிடியை செருகி பயன்படுத்தியுள்ளனர். சுத்தியல் உற்பத்தியில் இன்றுவரை இந்த நடைமுறைதான் தொடர்கின்றது. பல நூற்றாண்டு காலத்துக்குப் பின்னரே உலோகத்தால் சுத்தியல் தயாரிக்கும் நடைமுறை ஏற்பட்டு இறுதியில் சக்திமிக்க உருக்கினால் சுத்தியல் தயாரிக்கும் நடைமுறை உருவானது.

சுத்தியல் ஒன்றை வாங்க வேண்டுமானால் கொல்லர் பட்டறையை நாடிச் செல்லும் நடைமுறையே நீண்டகாலம் நிலவி வந்தது. இரும்பைத் தீயில் நன்கு பழுக்கக் காய்ச்சி பதப்படுத்தி தேவையான விதத்தில் ஆயுதங்களை உருவாக்கும் திறமைசாலிகளாக கொல்லர்களே இருந்தனர். அதன் பின்னர் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியை அடுத்து தொழிற்சாலைகளில் சுத்தியல் மற்றும் ஏனைய ஆயுதங்கள் உருவாகும் நிலை ஏற்பட்டது.


இன்றைய நிலையில் பாவனையாளர்கள் விற்பனை நிலையங்களுக்குப் போய் தமக்குத் தேவையான தொகையிலும் அளவுகளிலும் சுத்தியல் மற்றும் ஆயுதங்களைப் பெறக்கூடிய நிலை உள்ளது. அமெரிக்காவில் பிரபல சுத்தியல் உற்பத்தி நிறுவனம் ஒன்று 250 வகையான மற்றும் அளவுகளிலான சுத்தியல்களை உற்பத்தி செய்கின்றதாம்.



ஆரம்பத்திலிருந்து சுத்தியலுக்கு மரக் கைப்பிடியே போடப்பட்டு வந்தது. தற்போது உருக்கினாலும் மற்றும் உலோகங்களினாலும் போடப்பட்டு வருகிறது.

-ராஜா

# முன்னோர்களின் எலும்புகள் தம்மை பாதுகாப்பதாக நம்பும் மக்கள்



இறந்துபோன தமது முன்னோர்களின் எலும்புகள் தம்மைப் பாதுகாப்பதாக நம்பி அவற்றை பரம்பரை பரம்பரையாக பெட்டிகளில் போட்டு பாதுகாத்து வருகிறார்கள் பேங் என்னும் ஓர் ஆதிவாசி இன மக்கள்.

இறந்துபோன முன்னோருக்கு அவர்கள் உயிர் வாழ்ந்தபோது எவ்வளவு சக்தி இருந்ததோ அதே அளவு சக்தி அந்த எலும்புகளுக்கும் இருப்பதாக இவர்கள் பாரம்பரியமாக நம்பி வருகின்றனர். இந்த பேங் இன ஆதிவாசிகள் உஷ்ணமும் ஈரமும் மிக்க கெபோன் நாட்டு மலைக்காடுகளில் வசிக்கின்றனர். இந்த ஆதிவாசிகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பண்ணைச் செய்கைக்காக இப்பிராந்தியத்துக்கு குடியேறியவர்கள் என்று அறிவிக்கப்படுகின்றது. இவர்கள் மிகுந்த பலசாலிகளாக இருந்த காரணத்தால் இங்கு வாழ்ந்த மக்களை வெற்றிகொண்டு தமது ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்கள். இன்றும்கூட இங்கு வாழும் பல்வேறு இன மக்களும் இவர்களுக்கு அஞ்சியே வாழ்கின்றனர்.



பேங் கிராமங்களில் தலைமைத்துவம் பாரம்பரிய ரீதியில் தெரிவு செய்யப்படுகிறது. இத்தலைவர் இம்மக்களின் ஆன்மீகத் தலைவராகவும் செயல்படுகிறார். இவர் இறந்துபோன முன்னோர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடியவர் என்றும் இம்மக்கள் நம்புகின்றனர். பேங் இன மக்களின் முன்னோர்கள் பயங்கர யுத்தங்களில் ஈடுபட்டிருந்ததாக பழைய கதைகள் மூலம் அறியமுடிகின்றது.

இவர்கள் ஆதியில் வாழ்ந்த பகுதியில் இருந்து அரக்கன் ஒருவனால் விரட்டப்பட்டதாகவும் அங்கிருந்து வந்த இவர்கள் ஓர் ஆற்றைக் கடக்க முடியாமல் தவித்தபோது அங்கு ஒரு பெரிய பாம்பு ஆற்றுக்கு குறுக்கே தனது உடலை கிடத்தி ஆற்றைக் கடக்க வழி ஏற்படுத்தியதாகவும் அதில் ஏறி இம்மக்கள் ஆற்றைக் கடந்து மறுகரைக்கு வந்ததாகவும் ஒரு பழங் கதை கூறுகிறது.

பேங் இன மக்கள் பற்றி இப்படிப் பல நம்பமுடியாத கதைகள் இருக்கின்றன. இவர்களின் குடிசைகள் மரக்கிளைகள் வைக்கோல் தும்பு என்பவற்றால் அமைக்கப்பட்டிருக்கும். கூரை கூம்பு வடிவில் அமைக்கப்பட்டிருக்கும். இவர்கள் நாளாந்தக் கடமைகளாக ஜீவனோபாயத்துக்காக சமைத்தல், தானியங்களை அரைத்தல், வாழைப்பழங்களை பெரிய பாத்திரங்களில் போட்டு பிசைந்து எடுத்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இவர்களுடைய குடிசைகள் இருளடைந்தும் சிறியதாகவும் காற்றுவசதி இன்றியும் அமைக்கப்பட்டிருப்பதால் இவர்கள் இக்கடமைகளை வெளியிலேயே செய்கின்றனர். உறங்குவதற்காகவும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் மழைக்காகவும் மட்டுமே இவர்கள் குடிசைகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஒவ்வொரு பேங் கிராமத்திலும் பலர் சேர்ந்து அமைத்த பெரிய குடிசை ஒன்று காணப்படும். இதற்கு 'சொல்லின் இல்லம்' (House of the word) என்று பெயர். இங்கு இவ்வின மக்கள் ஒன்றுகூடி அரட்டையடித்தல், கிராமப் பிரச்சினைகள் பற்றி பேசித் தீர்த்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இந்த இல்லத்தில் இறந்துபோன மிக முக்கியமான முன்னோர்களின் எலும்புகளும் பாதுகாக்கப்படுகின்றன. பேங் இன மக்கள் பற்றி இப்படி பல விசித்திர தகவல்களை அறியக்கூடியதாக இருக்கின்றது.

-சீலன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (சா/தர) பரீட்சையில் 8'A' பெற்ற மாணவர்களுக்கு இலங்கை-கெனடா அமைப்பின் புலமைப்பரிசில்

இலங்கை-கெனடா புலமைப்பரிசில் அமைப்பு, கடந்த வருடம் (2008) நடைபெற்ற க.பொ.த (சா/தர) பரீட்சைக்குத் தோற்றி, முதல் அமர்வில் குறைந்தது 8 பாடங்களில் விசேட சித்தி (A) பெற்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கத் தீர்மானித்துள்ளது. குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களை சேர்ந்த மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்க லாம்.

விண்ணப்பதாரிகள் குறித்த பரீட்சைப் பெறு பேறுகளை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்த லுடன் பெயர், முகவரி, பிறந்த திகதி,பால் வேறுபாடு (ஆண்/பெண்), பரீட்சை சுட்டெண், தொலைபேசி இலக்கம், குடும்ப அங்கத்தவர் களின் எண்ணிக்கை மற்றும் அவர் களின் தொழில் விபரங்களுடன் குடும்பத்தின் மாதாந்த் முழு வருமானம் என்பனவற்றை சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவம்



குறித்த பிரதேசத்திற்குரிய கிராம உத்தியோகத்தரால் உறுதிப்படுத் தப்பட்டு, மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் **பதில் இணைப்புச் செயலாளர், இலங்கை-கெனடா புலமைப்பரிசில் அமைப்பு, இல.22/3, ஜயந்தி மாவத்தை, ஸ்வாரபொல, பிலியந்தலை** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இந்த புலமைப்பரிசிலுக்காக 100 பேரளவில் மாத்திரமே தெரிவு செய்யப்படவுள்ளதால் மேலே கேட்கப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் கவனத்தில் கொள்ளப்படும் என்பதோடு, உரிய விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரிகளின் இலகு வழிகாட்டலுக்காக www.slsf.org என்ற இணையத்தளத்தில் மாதிரி விண்ணப்படிவமும் அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## தரம்-1 மாணவர்கள் அனுமதி:

# பெற்றோரின் வீடுகளில் வசிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு விசேட சலுகை

எதிர்வரும் வருடத்தில் (2010) தரம்-1 இற்கு பிள்ளைகளை அனுமதிப்பதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது பெற்றோரின் வீடுகளில் வசிப்பவர் களாக இருப்பின் அவர்களின் பிள்ளைகளுக்கு விசேட சலுகையைப் பெற்றுக்கொடுப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது அமுலிலுள்ள சட்ட திட் டங்களுக்கு அமைவாக விண்ணப்ப தாரியொருவர் தனது பெற்றோருக்கு சொந்தமான வீட்டில் வசிப்பவராக இருப்பின், அவர் அந்த வீட்டின் குடும்பத் தலைவர் அல்லது உப குடும்பத் தலைவர் ஆகிய இரு பிரிவு களுக்கும் உட்படாத நிலையே இருக் கின்றது. இதனால், விண்ணப்பதாரிகள் தமது பிள்ளைகளை பிரதான பாடசாலைகளில் தரம்-1 இற்கு அனுமதித்துக் கொள்வதற்கான வாய்ப்பை இழக்கின்றனர். இது குறித்து கல்வி அமைச்சுக்கு அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அதை பரிசீலனை செய்ததை அடுத்து, இந்த விசேட சலுகையை வழங்குவதற்குத் தீர்மானித்ததாகவும் கல்விச் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.



இந்த விசேட சலுகை வழங்கலின்போது, வதிவிடத்தை உறுதி செய்தல் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட நடவடிக்கையொன்று செயல்படுத்தப்படும் எனவும் 2010 இல் தரம்-1 இற்கு பிள்ளைகளை அனுமதித்துக் கொள்வதற்கான சட்டதிட்டங்கள் அடங்கிய புதிய சுற்றுநிருபம் வெளியிடப்படவுள்ள தோடு, அதன் அடிப்படை நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் மாத இறுதியில் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் பணிகள் ஆரம்பமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# அதிக நேரம் நடைபெற்ற கால்பந்து போட்டி

அண்மையில் இங்கிலாந்து நாட்டின் ப்ரிஸ்டஸ் நகரில் 36 மணி நேர கால்பந்தாட்ட போட்டி ஒன்று நடைபெற்றது. இப்போட்டியில் 'ப்ரிஸ்டல் எகடமி' என்ற அணி 284 கோல்களைப் போட்டு வெற்றி பெற்றது. 'ப்ரிஸ்டல் எகடமி' அணியை எதிர்த்துப் போட்டியிட்ட 'லீட்ஸ் பேட்ஜர்ஸ்' அணி 255 கோல்களை மட்டுமே எடுத்தது. ஒவ்வொரு அணியிலும் 18 வீரர்கள் விளையாடியதோடு, ஒவ்வொருவரும் 18 மணிநேரம் விளையாடினர்.

மூளை மற்றும் முள்ளந்தண்டு வீக்கத்துடனான மெனின்ஜைடிஸ் (Meningitis) எனும் நோய்க்கான நிதியம் ஒன்றுக்கு நிதி திரட்டுவதற்காகவே இப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உலகிலேயே அதிக நேரம் நடைபெற்ற கால்பந்தாட்ட போட்டியாக இது சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்னர் உலகில் நடைபெற்ற கால்பந்தாட்ட போட்டியொன்று 33 மணி 36 நிமிடம் வரை நடைபெற்றது. எனினும், இந்த சாதனையை மேற்படி போட்டி தற்போது முறியடித்துள்ளது.


# அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவர்கள் சாதனை

**அக்குறனை, அஸ்ஹர் மத்திய கல்லூரியிலிருந்து கடந்த 2008 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு ஆங்கில மொழி மூலம் தோற்றிய 34 மாணவர்களும் அனைத்துப் பாடங்களிலும்நூறுவீத சித்தியைப்பெற்று சாதனை படைத்துள்ளனர், அப்பாடசாலைக் குப் பெருமை சேர்த்துள்ளனர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பாராமல் கண்டுபிடிக்கப்பட்ட 'எக்ஸ்' கதிர்கள்



வில்ஹெம் பிறந்த வீடு



வில்ஹெம் கொன்ராட் ரொன்ட்டிஜன். 1845 மார்ச் 27 ஆம் திகதி ஜேர்மனின் 'பர்கிங்சன்டிஸ்' எனும் பழைமையான நகரில் பிறந்தார். அவரின் பெற்றோர் 'லினெப்' எனும் நகரில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தனர். காலப்போக்கில் அனைத்தும் மாறுதல் அடைந்து கொண்டிருந்தபொழுது பலர் விவசாயத்தைக் கைவிட்டு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தனர்.

வில்ஹெம்மின் பெற்றோரும் விவசாய நடவடிக்கைகளைக் கைவிட்டு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும், லினெப் நகரில் வியாபார நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியவில்லை. அதனால், அவர்கள் அந்தப் பிரதேசத்திலிருந்து அப்பெல்டூன் என்ற பிரதேசத்திற்கு சென்றனர். இந்த நகரம் முன்னேறிய நகராக இருந்ததுடன் வியாபார நடவடிக்கைகளுக்கு உகந்த இடமாகவும் இருந்தது. நகரத்திற்கு வந்த இந்த சிறிய குடும்பம் வியாபார நடவடிக்கைகளில் சிறந்த முன்னேற்றத்தை அடைந்தது. அந்த நகரத்தின் உயர் பாடசாலையான 'மாட்டினஸ் ஹர்மன் வென்டவுன்' பாடசாலையில் வில்ஹெம் சேர்க்கப்பட்டார். எனினும், சில மாதங்களிலேயே அந்த பாடசாலையில் இருந்து அவர் விலகிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதன் பின்னர் அவர் தனது ஆரம்பக் கல்வியை ஒல்லாந்தில் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர், யுட்ரேட்டில் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து இயந்திரப் பொறியியல் விஞ்ஞானத்தை கற்றுக்கொண்டார். இத்துறையில் இவர் காட்டிய திறமையினால் சுவிட்சர்லாந்தின் சூரிச் பல்கலைக் கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். அங்கு தனது 24 ஆவது வயதில் 'தத்துவ விஞ்ஞானம்' பற்றிய கலாநிதிப் பட்டத்தையும் அதன்பின் 1869 ஆம் ஆண்டு விஞ்ஞானப் பட்டதாரி நிலையினையும் பெற்றுக்கொண்டார்.

## தொழில் வாழ்க்கை

ஸ்ட்ரெஸ்பர்க் கிசன் மற்றும் மியுனிச் ஆகிய பல்கலைக்கழகங்களில் பேராசிரியராக இணைந்து அவர் தனது வாழ்க்கையை ஆரம்பித்தார். பின்னர் வில்ஹெம் 1885 இல் புஸ்பர்க் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக நியமனம் பெற்றார்.

## எக்ஸ் கதிர்கள் கண்டுபிடிப்பு

வில்ஹெம் அனேகமாக விஞ்ஞானகூடத்திலேயே தனது பெருமளவான நேரத்தை செலவிட்டார். விஞ்ஞானகூடத்தில் இருந்து மின்சாரம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதே அவருக்கு விருப்பமாக இருந்தது. அன்றைய காலப் பகுதியில் பெருமளவான விஞ்ஞானிகள் ஆய்வுகூடங்களில் இருந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

அவ்வாறு ஆய்வுகள் மேற்கொண்டிருந்த வேளை மற்றைய விஞ்ஞானிகளை விட வேறுபட்டு அவர் புதிய விடயம் ஒன்றினைக் கண்டுபிடித்தார். 1895 நொவெம்பர் மாதம் 8 ஆம் திகதி வெற்றுக் கண்ணாடிக்குழாயினுள் மின்சாரத்தை செலுத்திக் கொண்டிருந்தபொழுது இந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. பொதுவாக மின்சாரம் பரவும் போது இலத்திரன்களும் பரவும். இந்த இலத்திரன்கள் அணுசக்தி மாற்றத்தினால் ஏற்படும் 'கெமா' கதிரில் மோதும் புதுமையான கதிர்கள் கிடைக்கின்றன. இதுபற்றி ஆய்வுகளை மேற்கொண்டிருந்த வில்ஹெம் கண்ணாடிக்குழாயிலிருந்து வெளியேறும் பிரகாசமான வெளிச்சம் அதற்கு அப்பால் உள்ள திரையில் விழுந்ததைக் கண்டார். அவர் திரையை விலக்கிப் பார்த்தார். அந்தக் கதிர்கள் அவ்வாறே தெரிந்தன. தடிப்பான கடதாசியை பிடித்துப் பார்த்தார். அந்தக் கதிர்கள் அவ்வாறே தெரிந்தன. அந்த வெப்பம் கடதாசியையும் கடந்து சென்றது.

'வெற்றுக் கண்ணாடிக் குழாயினுள் மின்சாரத்தை அனுப்பும்பொழுது வெளியேறும் கதிர்கள் கடதாசியை ஊடறுத்துப் பயணிக்கும்'

அவர் அந்தக் கதிர்வீச்சில் தனது கைகளை வைத்துப் பார்த்தார்.கைகளில் உள்ள எலும்புகளின் வடிவம் திரையில் தென்பட்டது. அப்பொழுது தனது வீட்டிற்கு ஓடிச் சென்ற அவர் தனது மனைவியை விஞ்ஞானகூடத்திற்குள் அழைத்து வந்தார்.

உலகின் முதலாவது எக்ஸ் கதிர்வீச்சுப் பிரதியை வில்ஹெம் தகடு ஒன்றில் பதிவு செய்து கொண்டார். அவர் தனது மனைவியை அதற்குப் பயன்படுத்திக் கொண்டார்.

''நாம் இந்தக் கதிர்களுக்கு 'ரொன்ட்டிஜன் கதிர்' என்று பெயரிடுவோம்'' இவ்வாறு வுஸ்பர்க் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வொன்கொலிக்கர் கூறினார்.

''இல்லை அதற்கு 'எக்ஸ் கதிர்' என்று பெயரிடுவோம்'' என்று வில்ஹெம் கூறினார்.

அவர் 6 வாரங்கள் விடுப்பு எடுத்துக் கொண்டு தொடர்ந்து இந்த ஆய்வை மேற்கொண்டார். இந்த 6 வார காலப் பகுதியில் அவரால் வீட்டிற்கும் செல்ல முடியவில்லை. விஞ்ஞான ஆய்வுகூடத்திலேயே தங்கிவிட்டார்.

இந்த புதிய கதிர்கள் குறித்து நொவெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வு டிசம்பர் இறுதியிலேயே நிறைவு பெற்றது. 1895 டிசம்பர் 28 ஆம் திகதி தனது கண்டுபிடிப்புக் குறித்து அறிக்கை ஒன்றினை அவர் பௌதிகவியல் மற்றும் வைத்திய சங்கத்திற்கு அனுப்பி வைத்தார்.




## புதிய கதிர் எக்ஸ்ரே

இதுவே அந்த அறிக்கையின் தலைப்பாக அமைந்தது. இந்த புதிய கண்டுபிடிப்பு உலகம் முழுவதும் பரவியது. எலும்பு முறிவுகள் மற்றும் உடலுக்குள் செல்லும் வேற்றுப் பொருட்கள் பற்றி அறிந்து கொள்ள இந்த எக்ஸ் கதிர்கள் பயன்பட்டன. இன்று இந்த எக்ஸ் கதிர்கள் நோயைப் பற்றிய தீர்மானத்திற்கு வர அத்தியவசியமாக உள்ளன.

## பெற்றுக்கொண்ட விருதுகளின் விபரம்

**✱ 1876 இல் பேராசிரியர் பதவியினைப் பெற்றுக் கொண்டதுடன் பல்கலைக் கழகத்தில் எம்.ஓ பட்டம், அரச மரியாதை விருது என்பனவற்றையும் பெற்றுக்கொண்டார்.**

**✱ அரச விருதுகள் அமைப்பினால் அவருக்கு 'ருக்போட்' என்ற விருது வழங்கப்பட்டது. (முதலாவது உலகப்போரில் தன்வசம் இருந்த 'ருக்போட்' தங்கப் பதக்கத்தை யுத்தத்திற்காக தியாகம் செய்ய அவர் முன்வந்தார்)**

**✱ 1901ஆம் ஆண்டு அவருக்கு பௌதிகவியலுக்கான 'நொபேல்' பரிசு கிடைத்தது.**

**✱ ஜேர்மனின் கேசர் அரசின் கௌரவ விருது அளிக்கப்பட்டது.**

இவ்வளவு அளப்பரிய சாதனைகளைப் படைத்த இந்த விஞ்ஞானி அனைத்து சாதனைகளையும் தனது ஒற்றைக் கண்ணால் மேற்கொண்டார் என்ற தகவல் வியப்பளிப்பதாகும். இவரது ஒரு கண் பார்வைப்புலன் அற்றதாகும். உலகுக்கு அளப்பரிய சாதனைகளைப் பரிசளித்த இந்த சாதனை மிகு விஞ்ஞானி தனது 77 ஆவது வயதில் 1923 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி காலமானார்.




வில்ஹெம் அருங்காட்சியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகை அச்சுறுத்தும் பழுப்பு மேகங்கள்



மதிய வெயில் சுட்டெரிக்கும் நேரத்தில் கூட உங்கள் கண்ணுக்கெட்டிய தூரத்திலுள்ளவற்றை தெளிவாகப் பார்க்க முடியாத நிலை, 'ஹெட்லைட்' வெளிச்சத்தில் வாகனங்கள் போகவேண்டிய நிலை ஏற்பட்டால் எப்படியிருக்கும்? ஆனால், இன்னும் சில காலங்களில் உலகின் சில நகரங்களுக்கு இவ்வாறான நிலைமைதான் ஏற்படப் போகின்றது. ஆக, இந்த வெளிச்சக் குறைவுக்குக்காரணம் பழுப்பு மேகங்களே! அத்துடன், இந்த பழுப்பு மேகங்களுக்கு மாசுதான் முக்கிய காரணமாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்டப் பிரிவு, கடந்த ஏழு ஆண்டுகளாக ஆசிய நாடுகளின் நகர்ப்புறப் பகுதிகளை ஆராய்ச்சி செய்து ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கையை கடந்த வருடத்தின் இறுதிக்கட்டத்தில் வெளியிட்டிருந்தது. அதில் 'பூமியை அச்சுறுத்தும் புதிய சுற்றுச்சூழல் சீர்கேடு ஆசிய நாடுகளில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது' என்று குறிப்பிடப்பட்டிருந்ததோடு, இந்த பழுப்பு மேகங்கள்தான் இதற்குக் காரணம் என அதில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதில் மேகங்கள் எப்படி சுற்றுச்சூழலை சீர்கெடச் செய்யும் என்று நீங்கள் கேட்கலாம். இந்த மேகங்கள் தங்களுக்குள் மழையை ஒளித்து வைத்திருக்கவில்லை. மனிதர்கள் ஏற்படுத்திய அழுக்குகளின் குவியல்தான் இந்த மேகங்கள்! அனல்மின் நிலையங்கள் கக்கும் நிலக்கரிப் புகை மற்றும் கரித்துகள்கள், வாகனங்கள் வெளியிடும் நச்சுப்புகை, தொழிற்சாலைகள் வெளியிடும் அமிலங்கள் மற்றும் விறகுகள், குப்பைகளை எரிப்பதில் வெளியாகும் கழிவுகள் கலந்த புகை... இப்படி அனைத்தும் சேர்ந்ததே இந்த மேகங்கள். அத்துடன், தற்போது இந்த மேகங்கள் மிகப்பெரிய போர்வை போன்று வானத்தில் சூழந்திருக்கின்றன. மூன்று கிலோமீற்றர் உயரத்துக்கு இந்தப் புகைப்போர்வை வானத்தில் போர்த்தியிருக்கிறது. இந்த நச்சு மேகங்களில் இருக்கும் கரித்துகள்கள், சூரிய வெளிச்சத்தை பூமிக்கு வரவிடாமல் தடுக்கின்றன. இதன் விளைவாக ஆசியாவின் 13 பிரதான நகரங்கள் இயல்பான சூரியவெளிச்சத்தைப் பெறமுடியவில்லை. பீஜிங், பெங்கொங், ஷங்காய் எனத் தொடரும்




பழுப்பு மேகத்தால் சூழப்பட்ட நகரமொன்று

இந்த வரிசையில் இந்திய மாநகரங்களான மும்பையும் புது டில்லியும்கூட உள்ளடங்கியுள்ளன. இவைதவிர, ஆசியாவின் மேலும் பல நாடுகளும் இதன் ஆதிக்கத்துக்கு ஆளாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, சீனாவின் காங்கு நகரில் கடந்த முப்பது ஆண்டுகளாகவே சூரியவெளிச்சத்தின் அளவு 25 சதவீதம் குறைந்திருக்கிறதாம்!

வெறுமனே வெளிச்சம் குறைவது மட்டுமே இதில் உள்ள ஆபத்து என்பதில்லை. சூரிய வெளிச்சம் போதுமான அளவு இல்லாவிட்டால், பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது. அத்துடன், நச்சு மேகத்தில் இருக்கும் கரித்துகள்கள், சூரிய வெளிச்சத்தை கிரகிப்பதால், காற்றும் வெப்பமடைகிறது. இப்படி காற்று வெப்பமடைவதன் விளைவாக இமய மலையில் இருக்கும் பனிப்பாறைகள் உருகுகின்றன. இமயமலை பனிப்பாறைகள், 1950 ஆம் ஆண்டு இருந்ததை விட இப்போது 5 சதவீதம் அளவு குறைந்திருப்பதாக சீன விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர். ஆனால், இதன்போது உருகும் வேகம் முன்னரையும்விட அதிகம் என்பதால், 2050 ஆம் ஆண்டுக்குள் இப்போது இருக்கும் பனிப்பாறைகளில் 25 சதவீதம் காணாமல் போய்விடும் என்ற அச்சமும் நிலவுகின்றது.

அத்துடன், பருவநிலைகளையும் இந்த மேகங்கள் தாறுமாறாகப் பாதிக்கின்றன. இதனால், உரிய காலத்தில் பருவமழை பெய்யாது. காலநிலையிலும் திடீர் மாற்றங்கள் ஏற்படுகின்றன. மறைமுகமாக இதுவும் பயிர்களை சீரழிக்கும் காரணியாகின்றது.

இந்த நச்சு மேகங்கள் காற்றையும் மாசுபடுத்துவதால், அந்தக் காற்றை சுவாசித்து பலர் சுவாசக் கோளாறுக்கும் இருதயக் கோளாறுகளுக்கும் உள்ளாக நேர்கிறது. எனவே, சூழலில் நச்சுப் புகையின் வெளியேற்றத்தினை நிறுத்துவதைத் தவிர இதற்கு வேறு நிரந்தரமான தீர்வு இல்லை.

# மண்ணில் மட்டுமல்ல; விண்ணிலும் ரோபோக்கள்

இயந்திர மனிதர்கள் எனச் சொல்லப்படும் ரொபோக்கள் மண்ணில் மட்டுமல்ல; விண்ணிலும் வியாபிக்கத் தொடங்கியுள்ளன. இவை மனிதனால் செய்யமுடியாத அபூர்வமான, அபாயகரமான எத்தனையோ பணிகளை விண்ணிலிருந்து செய்து நம்மை வியப்பில் ஆழ்த்தியவண்ணம் இருக்கின்றன. விண்வெளி தொடர்பிலான பல்வேறு கண்டுபிடிப்புகளுக்கும் ஆராய்ச்சிகளுக்கும் ஆரம்பத்திலிருந்து இன்று வரை 'ரொபோ' இயந்திரங்களே உதவி வருகின்றன.

அந்தவகையில், செவ்வாயில் மனிதன் உயிர் வாழ முடியுமா? சந்திர மண்டலத்தில் நீர் இருக்கின்றதா? போன்ற நெடுநாளைய கேள்விகளுக்கு விடை காணத் தயாரிக்கப்பட்டவைதான் எக்ஸ்புளோரர், ரோவர், ஃபீனிக்ஸ் போன்ற ரொபோக்களாகும். இந்த விண்வெளி ரொபோக்கள் வண்ண வீடியோ கெமராக்கள், லேசர் ஒளியைப் பயன்படுத்தும் ரேடார் மற்றும் பார்வைத்தொகுதிகள் (Vision Systems) போன்ற நவீன கட்டமைப்புகளை உள்ளடக்கியுள்ளன. அத்துடன், விண்வெளி ரொபோக்களில் நீட்டி-மடக்கி-உயர்த்தி-தாழ்த்தி செயல்படுத்தக்கூடிய கைகள் (Flexible Arms)



ரோவர்



ஃபீனிக்ஸ்

காணப்படுகின்றன. இதனால், விண்வெளியில் ஏனைய கிரகங்களில் ஆய்வுக்காக அனுப்பப்படும் ரொபோக்கள் மண், கல் போன்றவற்றை எடுத்து ஆய்வு செய்யக் கூடியதாக இருக்கின்றன. விண்வெளிக்கு ஏவப்பட்ட ரொபோக்களின் வரிசையில் 1970 ஆம் ஆண்டு ரஷ்யா அனுப்பிய 'லூனா-16' முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற ரொபோக்களை அன்று ரேடியோ கட்டுப்பாட்டுக் கருவிகளூடாக (Radio Control) புவியிலிருந்து விஞ்ஞானிகள் இயக்கினர்.

பூமியிலிருந்தவாறு வானியல் நிபுணர்களால் பார்க்க முடியாத விண்வெளி அம்சங்களை ரொபோக்கள் பல கோணங்களில் புகைப்படம் எடுத்து, மண்ணிலுள்ளவர்களுக்கு விண்ணையே காட்டுகின்றன. ரொபோக்களில் பொருத்தப்பட்டுள்ள கெமராக்களினால் புகைப்படங்களை எடுத்து தினமும் அனுப்புகின்றன. இதனால், பல்வேறு விண்ஆய்வுகளுக்கு இவை வித்திட்டுள்ளன. உதாரணத்திற்கு, ரொபோக்கள் இவ்வாறு சந்திரனைப் புகைப்படம் எடுத்து அனுப்பியதன் விளைவாகத்தான் சந்திரனின் முழு விவர வரைபடத்தை எளிதில் வரையக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாட்டு மலைகளை

**எமது நாடு மிகவும் அழகானது. எமது நாட்டைச் சூழவுள்ள கடல் பகுதி அந்த அழகுக்கு மேலும் அழகு சேர்க்கின்றது. எமது நாட்டின் உட்பகுதிக்குச் செல்லும்போது இந்த அழகு இரண்டு முதல் மும்மடங்காக அதிகரிக்கின்றது. இயற்கையின் அரிய கொடைகளான மலைகள், நீர்வீழ்ச்சிகள், சமவெளிகள் இந்த அழகுக்கு பிரதான காரணமாகும். இவற்றுள் மலைச்சிகரங்களுக்கு விசேட அந்தஸ்து வழங்கப்படுகின்றது.**

## பிதுருதாலகால மலை



'பிதுருதாலகால' மலை இலங்கையின் உயரமான மலையாகக் கருதப்படுகின்றது. இதன் உயரம் 2524 மீற்றர்களாகும். மிகவும் அழகிய மலையான இதன் சிகரம் அதி குளிர் தன்மை கொண்டது. நுவரெலிய நகருக்கு அண்மையில் இந்த மலை அமைந்துள்ளது. இந்த மலைக்கு அண்மித்த வனாந்தரப் பகுதிகளில் அரிய வகைத் தாவரங்கள் மற்றும் விலங்குகள் உள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை எமது நாட்டிற்கே உரியவையாகும். இலங்கையின் மிக உயரமான மற்றும் அதிக குளிர் கொண்ட 'சாந்திபுர' என்ற பகுதி நுவரெலியாவுக்கும் 'பிதுருதாலகால' மலைப்பகுதிக்கும் இடையில் அமைந்துள்ளது. தேசிய தொலைக்காட்சியின் ஒளிபரப்புக் கோபுரமும் இந்த மலைப்பகுதியிலேயே அமைந்துள்ளது. சிறிய நீர் வீழ்ச்சிகள் பல உள்ள இந்த மலை 'போதோ' மலை என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றது.

## நக்கிள்ஸ்



'நக்கிள்ஸ்' மலைத்தொடர் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களுக்குரியது. எப்பொழுதும் பனியினால் சூழ்ந்திருப்பதனால் இதனை 'தும்பறை மலை' என்றும் அழைப்பர். அங்கு அளவைப் பணிகளில் ஈடுபட்டிருந்த பிரித்தானிய நில அளவையாளர்களே இந்த மலைத்தொடருக்கு 'நக்கிள்ஸ்' என்று பெயரிட்டுள்ளனர். விரல் மடிப்புகளை நினைவூட்டுவதனால் இந்த மலைக்கு 'நக்கிள்ஸ்' என்று பெயர் சூட்டியிருக்கின்றனர். 35 மலைச்சிகரங்களைக் கொண்ட 'நக்கிள்ஸ்' மலைத்தொடர் 3000 அடி (915 மீற்றர்) வரை உயரம் கொண்டது. இங்கு மருத்துவகுணம் மிக்க தாவரங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இது அகழ்வாராய்ச்சி முக்கியத்துவமும் வரலாற்று முக்கியத்துவமும் கொண்ட பிரதேசமாகும். அரிய மற்றும் அழிந்து போகும் அபாயம் கொண்ட பல உயிரினங்கள் இதில் உள்ளன. இலங்கைச் சிறுத்தைகள் இங்கு குறிப்பிடத்தக்க உயிரினமாகும். இந்தப் பகுதிக்கு மட்டும் உரிய உயிரினங்களும் உள்ளன. டெனன்னே கொம்பு ஓணான், மாபிள் கிளித் தவளை என்பன குறிப்பிடத்தக்க உயிரினங்களாகும். குருகஸ் ஓணான் இந்தப் பகுதிக்கேயுரிய உயிரினமாகும். இவ்வாறான உயிரினம் உலகில் சில மட்டுமே உள்ளன. அழிந்து போகக்கூடிய அபாயம் கொண்ட 21 வகை பறவையினங்களில் 14 வகை பறவைகள் இந்த வனாந்தரப்பகுதியில் வசிக்கின்றன. இலங்கைக்கேயுரிய மீனினங்கள் பலவும் இங்குள்ளன.



## கிரிகல்பொத்த

இலங்கையில் உள்ள மலைகளில் உயரத்தில் இரண்டாவது இடத்தினை வகிப்பது 'கிரிகல்பொத்த' மலையாகும். இதுவும் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ளது. உயரம் 2395 மீற்றர்களாகும். 'நோட்டன்' சமவெளிக்கு மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இந்த மலையில் கண்டு களிக்க பல அரிய விடயங்கள் உள்ளன. எமது நாட்டிற்குரிய பட்சிகள், உயிரினங்கள், தாவரங்கள் இங்கு அதிகம் உள்ளன.

## ரித்திகல

இலங்கையின் வடமத்திய பகுதியில் தெற்காக அமைந்துள்ள 'ரித்திகல' மலை மத ரீதியில் வரலாற்றுப் புகழ் மிக்கதாகும். இந்த மலைச்சுற்றுக்கு அண்மித்ததாக அமைந்திருக்கும் பள்ளங்கள், குகைகள், கற்குகைகள் கொண்ட அசாதாரணமான கட்டமைப்பு ஆதிவாசி பழங்குடி மக்களுக்கும் பிக்குகளுக்கும் அரச குலத்தவர்களுக்கும் சிறந்த அடைக்கலமாகும். மலைக்கு 43 கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள அனுராதபுரம் நகரத்துடன் தொடர்புடைய இந்தப் பகுதி தந்திரோபாய முக்கியத்துவம் மிக்கது. 572 மீற்றர் உயரம் கொண்டது. இதன் அடிவாரத்தில் மருத்துவமனை மற்றும் பௌத்த விகாரை என்பனவற்றின் அழிவுற்ற சின்னங்கள் காணப்படுகின்றன. கி.மு 350 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு மக்கள் குடியேற்றங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. 'ரித்திகல' தற்போது சரணாலயமாகவும் வன விலங்குகள் பாதுகாப்பு மையமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது இலங்கையின் வடபகுதியில் உள்ள உயரமான மலையாகும். இதற்கு அருகாமையில் சீகிரியா, மிகிந்தலை, தம்புள்ள போன்ற மலைகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ளப் பற்றிய தகவல்கள்

## தொட்டுபல



இலங்கையில் உள்ள மலைகளில் உயரத்தின் அடிப்படையில் மூன்றாவது இடத்தை 'தொட்டுபல' மலை வகிக்கின்றது. இது 2357 மீற்றர் வரை உயரம் கொண்டது. 'ஹோர்ட்டன்' சமவெளிக்கு அண்மித்ததாக இந்த மலை அமைந்துள்ளது. இங்கு செல்வதற்கு குறுகிய வழியே உள்ளது. அதுவும் வனவிலங்குகள் பயணிப்பதனால் இந்தக் குறுகிய பாதை ஏற்பட்டுள்ளது. இந்த மலைப்பகுதியில் பல்வேறு உயிரினங்கள் தாவரங்கள் உள்ளன. இங்கு காணப்படும் பறவையினங்கள் இலங்கைக்கே உரியவையாகும். இதனைப் 'பறவைகள் சரணாலயம்' என்றும் கூறலாம். வேறு நாடுகளில் இருந்து இங்கு வரும் பறவையினங்களும் உள்ளன. சிறுத்தைகள் பெருமளவான மான்கள் என்பனவற்றையும் இங்கு காணமுடியும்.

## சமனலகந்த



இரத்தினபுரியில் அமைந்துள்ள இந்த மலையை 'சிறிபாத' என்றும் கூறுவர். இது 2243 மீற்றர் உயரம் வரை கொண்டது. மத ரீதியில் இந்த மலை மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. உலகின் முக்கிய மதங்கள் நான்கு வழிபடும் மலையாக இது பிரசித்தி பெற்றுள்ளது. புத்தரின் பாதச்சுவடு இருப்பதாக நம்பும் பௌத்தர்களுக்கு இம்மலை முக்கியமானதாக விளங்குகின்றது. இந்துக்கள் இந்தப் பாதச்சுவடு சிவபெருமானுடையது என நம்புகின்றனர். கிறிஸ்தவர்கள் இது புனிதர் தோமஸ் அடியாரின் பாதச்சுவடு என்கின்றனர். இவ்வாறே, இஸ்லாமியர்கள் அதனை ஆதாமின் பாதச்சுவடு என்கின்றனர். இதனால், இந்த மலை 'ஆதம்ஸ்பீக்' எனப்படுகின்றது. இலங்கையின் பிரதான நான்கு ஆறுகளான மகாவலி, களனி, களுகங்கை, வளவை கங்கை என்பன இங்கிருந்தே தமது பயணத்தை ஆரம்பிக்கின்றன.

## மிகிந்தலை



பௌத்தர்கள் மிகிந்தலையை மத ரீதியில் மரியாதைக்குரிய பக்திபூர்வமான இடமாகக் கருதுகின்றனர். இங்கு சில மலைத்தொடர்கள் உள்ளன. அனுராதபுரத்தை ஆண்ட தேவநம்பியதீசன், மகிந்த தேரரை இங்கு சந்தித்தமையினால் இதற்கு, 'மிகிந்தலை' என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. மாமரங்கள் கொண்ட நிழலில் இந்த சந்திப்பு நிகழ்ந்ததனால் இதனை 'அம்பஸ்தலே' என்றும் கூறுவர். இது அனுராதபுரத்திலிருந்து 13 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. கி.மு 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீசன் மிகிந்தலை வனப்பகுதியை சரணாலயமாகப் பிரகடனப்படுத்தினான். உலகின் முதலாவது சரணாலயமாக இது கருதப்படுகின்றது.

## ஹோர்ட்டன் சமவெளியும் உலக முடிவும்



'ஹோர்ட்டன்' சமவெளியில் காணக்கூடிய அழகிய பிரதேசமாக நுவரெலியா உலக முடிவினைக் குறிப்பிட முடியும். பனி படர்ந்த முகில்கள் நிரம்பிய இந்த உலக முடிவின் பள்ளம் 1312 மீற்றர்களாகும். உலக முடிவில் இருந்து பார்க்கும்போது பல அழகிய சுற்றுப்புறக் காட்சிகளைக் காணமுடியும். எப்பொழும் பனி, முகில்களினால் சூழ்ந்திருப்பினும் தெளிவான நாட்களில் தெற்கில் 81 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இந்து சமுத்திரத்தை இங்கிருந்து காணமுடியும்.

## உடமல



'உடமல' எமது நாட்டில் உள்ள மற்றுமொரு மலையாகும். இது பதுளை நுவரெலியா மாவட்ட எல்லைகளில் அமைந்துள்ளது. 1850 மீற்றர் வரை உயரம் கொண்டது. காலைப்பொழுதுகளில் அலவத்துகொட பகுதிக்கு இந்த மலை தெளிவாகத் தெரியும். இந்த மலைப்பகுதிக்குரிய உயிரினங்கள், தாவரங்கள் பல உள்ளன.

## நமுனுகுல



பதுளை மொனராகலை மாவட்ட எல்லையில் உள்ள 'நமுனுகுல' மலையானது பதுளைப் பகுதிக்குரியதாகும். இது 2036 மீற்றர் வரையிலான உயரம் கொண்டதாகும். வெளிநாட்டு உள்நாட்டு மலை ஏறுபவர்களின் பிரசித்தமான இடமாகும். மலைச்சிகரத்திலிருந்து உடவளவை, யால சரணாலயங்களைக் காணமுடியும்.

## பத்தலேகல



இது வடிவத்தினால் 'பைபிள் கல்' என்று ஐரோப்பியர்களினால் அழைக்கப்பட்டது. இது கேகாலை மாவட்டத்திற்குரிய மலையாகும். கொழும்பு கண்டி பிரதான வீதியில் பயணிக்கும்போது கடுகண்ணாவ பகுதிக்கு அண்மையில் இந்த மலையைக் காணமுடியும். இந்த மத்திய மலைப்பகுதியில் அரநாயக்க அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொற்றுநோய் ஆராய்ச்சியாளர்கள் குருதியைத் தூய்மையாக்கும் கருவி (Hemopurifier) ஒன்றை உருவாக்கியுள்ளனர். மெல்லிய இழைகளின் துணை கொண்டு குருதியில் உள்ள வைரஸ்களை இந்தக் கருவி வடிகட்டிவிடும். குருதிக்குழாயிலிருந்து இக்கருவியின் குழாய் வழியாக குருதி கருவிக்குள் செல்கிறது. அதன்பின்னர் குருதியில் உள்ள அனைத்து வைரஸ்களும் சில மணி நேரங்களுக்குள் நீக்கப்படுகின்றன. பின்னர் சுத்தம் செய்யப்பட்ட குருதி மீண்டும் உடலுக்குள் செலுத்தப்படுகின்றது. இந்தக் கருவியின் அறிமுகத்தினை அடுத்து எண்ணற்ற நோய்கள் குணப்படுத்தப்படுகின்றன.

நாளொன்றுக்கு 14,000 பேர் எச்.ஐ.வி வைரஸ்களால் பாதிக்கப்படுகிறார்கள். இந்தக் கருவி 'எய்ட்ஸ்' நோயாளிகளின் குருதியையும் சுத்திகரிக்கக்கூடியது. இதனால், எய்ட்ஸ் நோயாளிகளின் நீடித்த ஆயுளுக்கு வழிபிறந்துள்ளது.

இந்தக் கருவி 'டயலசிஸ்' கருவியைப் போன்றது. சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கே 'டயலசிஸ்' செய்யப்படுகிறது. உடலில் உள்ள குருதி அனைத்தும் செயற்கை சிறுநீரகத்துக்குச் செலுத்தப்பட்டு-சுத்தம் செய்யப்பட்டு-மீண்டும் உடலுக்குள் செலுத்தப்படுகிறது. எனினும்

# குருதியைத் தூய்மையாக்கும் கருவி




'டயலசிஸ்' என்பது உயிரைத் தக்க வைப்பதற்கான சிகிச்சையே தவிர, நோயிலிருந்து விடுதலை அளிப்பதற்கான சிகிச்சை அன்று. ஆனால், இந்தக் கருவியோ குருதியை தூய்மையாக்குவதோடு, நோய்களிலிருந்து விடுதலையும் அளிக்கக்கூடியது. ஹெபடைடிஸ்-சி, தட்டம்மை, காய்ச்சல் போன்றவற்றுக்கு ஏதுவாக உள்ள வைரஸ்கள் இதன்மூலம் எளிதில் நீக்கப்பட்டு விடுகின்றன.

**ஜெ.டிசோகுமார்**



டயலிசிஸ் செய்யப்படல்



# எத்தனை அதிசயம்?

**சாதாரணமாக ஒரு மனிதன் நிமிடத்துக்கு சுமார் ஆறு கிலோகிராம் எடையுள்ள காற்றை உள்ளிழுத்து வெளியே விடுகிறான். எனினும், நடக்கும்போதோ, நீச்சலடிக்கும்போதோ அல்லது சற்றே கடினமான உடற்பயிற்சியில் ஈடுபடும்போதோ சுவாசத்துக்கு நூறு கிலோகிராம் காற்றுத் தேவைப்படுகிறது.அதாவது, சாதாரண நிலையில் இருக்கும்போது தேவைப்படுவதைப் போல பதினாறு மடங்கு!**

**அதேபோல் ஒரு நாளில் நமக்குள்ளே நடக்கும் மேலும் சில அதிசயங்கள் பற்றித் தெரியுமா? சராசரியாக நாம் 23,000 முறை சுவாசிக்கிறோம். 450 கன அடி பரிமாணமுள்ள காற்றை உள்ளிழுத்துக் கொள்கிறோம்; ஒன்றரைக் கிலோ எடையுள்ள உணவை உட்கொள்கிறோம்; பேசுவதால் 750 தசைநார்களை அசைக்கின்றோம்; நம் உடலுக்குள் 17 லட்சம் மைல்கள் ரத்தம் பயணம் செய்கிறது!**

---

## தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

## தொழிற்தொடர்பு, மனிதவள அமைச்சு

NPS SRI LANKA



# விஜய் உற்பத்தித்திறன் ஓவியப் போட்டி - 2009

## குழுவாக செயற்படுவதன் மூலம் வினைத்திறனை அதிகரித்தல்

**தலைப்பு**

உற்பத்தித்திறன் கோட்பாட்டினை நாடு பூராவும் வியாபிக்கச் செய்வதில் செயற்படுகின்ற ஒரே அரச நிறுவனம் தேசிய உற்பத்தித்திறன் செயலகமேயாகும். இதன் கீழ் உற்பத்தித்திறன் மேம்பாட்டை கருத்திற் கொண்டு, 2009 ஆம் ஆண்டிலும் சித்திரப் போட்டியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

'குழுவாக செயற்படுவதன் மூலம் வினைத்திறனை அதிகரித்தல்' என்ற தலைப்பிலேயே போஸ்டர் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது.

**இப்போட்டி 5 பிரிவுகளாக நடத்தப்படும்**

1. பாடசாலை மட்டம் - தரம் 1 தொடக்கம் 5 வரை
2. பாடசாலை மட்டம் - தரம் 6 தொடக்கம் 11வரை
3. பாடசாலை மட்டம் - தரம் 12 தொடக்கம் 13 வரை
4. பல்கலைக்கழக மட்டம் - பல்கலைக்கழக மாணவர்கள்
5. பகிரங்க மட்டம் - இலங்கையர் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

**ஓவியத்தின் அளவு**

அளவு - 18x24 அங்குலம்

'பிரிஸ்டல் போர்ட்' அல்லது ஓவியம் வரைவதற்கு பயன்படுத்தும் அட்டைகள், தாள்கள் எதையாவது பயன்படுத்தலாம்.

மொழி - தமிழ், சிங்களம், ஆங்கிலம்

**பரிசு விபரம்**

**பாடசாலை பிரிவு 1 மற்றும் 2**

1 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 5,000 மற்றும் சான்றிதழ்

**பாடசாலை பிரிவு 3**

1 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 7,500 மற்றும் சான்றிதழ்

**பல்கலைக்கழக மட்டம்/பகிரங்க மட்டம்**

1 ஆவது பரிசு - ரூபா 25,000 மற்றும் சான்றிதழ்
2 ஆவது பரிசு - ரூபா 15,000 மற்றும் சான்றிதழ்
3 ஆவது பரிசு - ரூபா 10,000 மற்றும் சான்றிதழ்

மேற்குறிப்பிட்ட வெற்றியாளர்களுக்கு மட்டுமன்றி தேர்வு செய்யப்படுகின்ற ஏனைய ஓவியங்களுக்கும் திறமைச் சான்றிதழ் வழங்கப்படும்.

உங்களது ஓவியங்களை உங்கள் பகுதிக்குரிய பிரதேச செயலகத்தின் தொழிற்தொடர்பு மற்றும் மனித வள அமைச்சின் உதவியாளரிடமும் கையளிக்கலாம்.

**போட்டி விதிமுறைகள்**

1. அனுப்பப்படுகின்ற ஓவியம் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம். ஆனால், ஒன்றுக்கு மட்டுமே பரிசு வழங்கப்படும்.
3. பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரின் மேற்பார்வையின் கீழ் ஓவியங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. பாடசாலை மட்டத்தில் அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்.
5. சகல பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
6. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் தம்மை உறுதி செய்தல் வேண்டும்.
7. போட்டியாளர்கள் தமது ஓவியத்தின் பின்புறத்தில் இங்கு வழங்கப்பட்டுள்ள மாதிரிக் கூப்பனை ஒத்த கூப்பன் ஒன்றினைத் தயாரித்து நிரப்பி ஒட்டுதல் வேண்டும்.
8. போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் அனைத்தும் நடுவர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதித் தீர்ப்பாகும். வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் கொழும்பில் வைத்து வழங்கப்படும்.
9. நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஓவியங்கள் மற்றும் இவற்றை பிரசுரிக்கும் உரிமையோ, தேவை கருதி அவற்றைப் பயன் படுத்தும் உரிமையோ தேசிய உற்பத்தித் திறன் செயலகத்திற்கே உரித்துடையதாகும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 2009.04.30**
**அனுப்ப வேண்டிய முகவரி :**
**பணிப்பாளர்,**
**தேசிய உற்பத்தித்திறன் செயலகம்,**
**இல 318, ஹைலெவல் வீதி, கொழும்பு-06.**

### மாதிரி விண்ணப்பப் படிவம்

01. 1. மாவட்டம் ..............................
போட்டிப் பிரிவு ..............................
02. 1. முதல் பெயர் ..............................
(ஆங்கில தனியெழுத்தில்)
11. முழுப் பெயர் ..............................
03. 1. முகவரி ..............................
(ஆங்கில தனியெழுத்தில்)
..............................
..............................
11. தொலைபேசி ..............................
04. வயது ..............................
05. 1. பாடசாலையின் பெயர்/முகவரி
..............................
..............................
11. வகுப்பு (தரம்) ..............................
06. பல்கலைக்கழக மாணவர்களாயின்
1. பல்கலைக்கழகத்தின் பெயர்
..............................
11. கல்வி கற்கும் பிரிவு (பீடம்)
..............................

..............................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**மேற்கூறப்பட்டுள்ள விபரங்கள் முற்றிலும் உண்மையானவையே என உறுதிப்படுத்துகின்றேன்.**

..............................
பாடசாலை அதிபர்/பீடாதிபதி
(கையொப்பம்/றப்பர் முத்திரை)

ஊடக அனுசரணை:

விஜய் விஜய ITN SriLanka


மேலதிக விபரங்களுக்கு :-

தொலைபேசி 2812163/6, ஃபெக்ஸ் - 2812162, மின்னஞ்சல் - npsl@nps.lk

பரிசு அனுசரணை: O-KAY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1815 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி கண்டி மன்னரான ஸ்ரீ விக்கிரம இர்ராஜசிங்கன் ஆங்கிலேயரால் சிறைப்பிடிக்கப்பட்டதுடன் கண்டி ராச்சியம் ஆங்கிலேயரின் காலடியில் வீழ்ந்தது



# இலங்கையின் கடைசி மன்னர் ஆங்கிலேயரின் பிடிக்குள் சிக்கியமை



1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை கைப்பற்றிய போது இலங்கை கண்டி மன்னரான ராஜசிங்கனால் ஆளப்பட்டு வந்தது. அம்மன்னனின் பின்னர் கன்னுசாமி என்ற இளவரசன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் என்ற பெயரில் 1798 ஆம் ஆண்டு அரச பதவியைப் பொறுப்பேற்றான்.

இக்காலப்பகுதியில் ஆங்கிலேயர்கள் படிப்படியாக அவர்களது ஆட்சி விஸ்தரிப்பை மேற்கொண்டு இலங்கை முழுவதையும் ஆக்கிரமித்து கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இந்நடவடிக்கைக்கு ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் கண்டி ராச்சியம் பெரும் தடையாக இருந்துவந்தது. இம்மன்னனின் போர்த் தந்திரோபாயத்தால் கண்டி ராச்சியத்தைக் கைப்பற்றுவது மிகவும் கஷ்டமாக இருந்தது.

1803ஆம் ஆண்டு அப்போதைய பிரித்தானிய ஆளுனராக இருந்த பிரட்ரிக் நோர்த் என்பவனின் வழிகாட்டலின்கீழ் கண்டி ராச்சியத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு ராஜசிங்கனின் போர் உத்திகளால் முறியடிக்கப்பட்டது. 1805 ஆம் ஆண்டு ஆளுனராக இருந்த தோமஸ் மேட்லன்ட் என்பவன் உடனடியாகப் படையெடுப்பை மேற்கொள்ளாது உளவாளியொருவனை நியமித்து கண்டி ராச்சியத்தின் ரகசியங்களைத் திரட்டினான். அதற்காக டொய்லி என்ற சிங்களம் பேசக்கூடிய அதிகாரி ஒருவன் நியமிக்கப்பட்டான்.

1812 ஆம் ஆண்டு ஆளுனராக இருந்த பிரவுன்றிக் கண்டி ராச்சியத்தின் போர்த் தந்திரோபாயங்கள், அரசனின் உள்விவகாரங்கள் மற்றும் உள்ளூர் பாதுகாப்புத் தொடர்பான எல்லா ரகசியங்களையும் சேகரித்துக் கொண்டான். அத்தோடு, கண்டி ராச்சியத்திற்குள் உட்பூசலை உருவாக்கும் முயற்சியில் பிரவுன்றிக் என்ற அந்த ஆளுனர் முயற்சி செய்தான்.

இந்நிலையில் ராஜசிங்கன் கொடுங்கோன்மை கொண்ட மன்னன் போல் ஆகிவிட்டான். இக்கால கட்டத்தில் பிலிமதலாவை அதிகாரம் ராஜசிங்கனுக்கு எதிராக சூழ்ச்சிகளிலும் சதித்திட்டங்களிலும் ஈடுபட்டான். இதனை அறிந்த அரசன் அவனைக் கொலை செய்துவிட்டான்.

அவனின் பின்னர் அதிகாரம் பதவிக்கு எஹலேபொல நியமிக்கப்பட்டான். ராஜசிங்க மன்னனை அதிகம் நேசித்த நாயக்கர் குலத்தைச் சேர்ந்தவராக எகலேபொல இருந்தான். இதனால், அரசனோடு ஒத்துழைத்த சிங்களத் தலைவர்கள், பிரதானிகள் மிகவும் அதிருப்தியடைந்தனர். அரசனும் சிங்களத் தலைவர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான். அரசனின் இச்செயல்களை வெறுத்த எகலேபொல சப்ரமுவவில் இருந்து அரசனை எதிர்ப்பதற்காக கிளர்ச்சியை தூண்டிவிட்டான்.

இதனை அறிந்த அரசன் 'அதிகாரம்' பதவியை பறித்து அவனுக்குப் பதிலாக மொல்லிகொடவை 'அதிகாரம்' பதவிக்கு நியமித்தான். அத்துடன், எகலேபொலவை கைது செய்யப் படைகளை அனுப்பி வைத்தான். அதனால், அரசனைப் பழிவாங்கத் திட்டமிட்ட எகலேபொல ஆங்கிலேயர்களுடன் சேர்ந்துவிட்டான். இதனால், ஆத்திரம் கொண்ட ராஜசிங்க மன்னன் எகலேபொலவின் மனைவியையும் குழந்தைகளையும் இன்றைய தலதா மாளிகை (அன்றைய அரண்மனை) முன்னால் மிகக் குரூரமான முறையில் கொலை செய்தான். இதனால், மக்களும் சிங்கள மேல் நிலைக் குடிமக்களும் பிரபுக்களும் அரசன் மீது ஆத்திரம் அடைந்தனர்.

மக்களின் எதிர்ப்பு வலுவடைந்தது. இக்காலப் பகுதியில் தாழ்நாட்டு (தென்பகுதி) வர்த்தகர் குழுவொன்றை ராஜசிங்க மன்னனின் படைகள் தாக்கித் துரத்தியடித்த போது, ஆங்கிலேயரின் நிர்வாகம் நிலவிய கரைநாட்டுப் பகுதி கிராமம் ஒன்றை அப்படைகள் தீக்கிரையாக்கின. இதனால்,ஆத்திரமடைந்த ஆங்கிலேய ஆளுனர் பிரவுன்றிக் கண்டி ராச்சியம் மீதான படையெடுப்புக்கு உத்தரவிட்டான்.

இதன்படி பிரித்தானியரின் கண்டி ராச்சியம் மீதான படையெடுப்பு 1815 ஆம் ஆண்டு வெற்றியளித்தது. முன்னைய அதிகாரம் பதவி வகித்த ஹெலேபொலவும் ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்ற உதவி புரிந்தான். மெதமஹநுவர போமுர உடுபிடிய என்ற (ஆரச்சி) அரசனின் நண்பனின் வீட்டில் மறைந்திருந்த போது கண்டிய மக்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு அரசன் ஆங்கிலேயப் படைகளால் கைது செய்யப்பட்டான்.

1815 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் ஆங்கிலேயரின் சிறைக்கைதியானான். அத்துடன், இலங்கையின் அரச வம்சம் முற்றுப்பெற்று இலங்கை முழுவதும் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளான ஆங்கிலேயர்களின் காலடியில் மண்டியிட நேர்ந்தது.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெறும் வரையில் 152 வருடங்களாக இலங்கை ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. எவ்வாறாயினும், இலங்கை வரலாற்றுப் பதிவுகளின்படி ராஜசிங்க மன்னனின் மதிநுட்பம் இல்லாத ஆட்சி காரணமாகவே 1815 ஆம் ஆண்டு வரையில் பலம் பெற்ற நிர்வாகமாக இருந்த மலையக ராச்சியம் ஆங்கிலேயர்களின் காலடியில் வீழ்ந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

**அமீர் ஹுசைன்**






ராஜசிங்க மன்னனின் கிரீடம்



மன்னனின் மேலாடை



சிம்மாசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசெர்பய்ஜான்



**அரசு:** அசெர்பய்ஜான் குடியரசு (Republic of Azerbaijan)
**தேசிய பெயர்:** அசெர்பய்ஜான் ரெஸ்பப்ளிகாசி.

## அமைவிடம்

தென்மேற்கு ஆசியாவின் நுழைவாயிலில் அமைந்துள்ளது. மேற்கில் ஆர்மேனியாவும் வடக்கில் ஜோர்ஜியா மற்றும் ரஷ்யக் கூட்டமைப்பும் கிழக்கில் கஸ்பியன் கடலும் தெற்கில் ஈரானும் அதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

## வரலாறு

புராதன காலத்தில் 'அல்பேனியா' என இது அழைக்கப்பட்டது. 1922 இல் பலவந்தமாக சோவியத் யூனியனுடன் இணைக்கப்பட்டது. சோவியத் யூனியனின் சிதறலையடுத்து, 1991 இல் மீண்டும் சுதந்திர நாடாகியது. 1995 இல் அதிபருக்கு அதிக அதிகாரம் வழங்கும் புதிய அரசியல் சட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

**ஜனாதிபதி:** இல்ஹாம் அலியேவ்
**பிரதமர்:** ஆர்துர் ரசிஸாடே
**மொத்த நிலப்பரப்பு:** 86,600 சதுர கி.மீற்றர்
**சனத்தொகை (2008):** 8,177,717
**தலைநகர்:** பாகு
**பெரிய நகரம்:** பாகு-கஸ்பியன் கடலின் துறைமுக நகர்.
**ஏனைய பெரிய நகரங்கள்:** கன்கா (Ganca), சும்கெய்ட் (Sumqayit)
**முக்கிய ஆறுகள்:** குரா, அராக்கா
**மொழிகள்:** அசெர்பய்ஜானி




டர்சிக் - 89%, ரஷ்ய மொழி - 3%, ஆர்மேனியன் - 2%, ஏனைய மொழிகள்- 6%
**இனப்பிரிவுகள்:** அஸெரி - 90.6%, டாஜெஸ்டானி-2.2%, ரஷ்யர்-1.8%, ஆர்மேனியர் 1.5%, ஏனையோர் - 3.9%
**மதங்கள்:** இஸ்லாம் 93%, ரஷ்ய ஓர்தடக்ஸ் 3%, ஆர்மேனிய ஓர்தடக்ஸ் 2%, ஏனையோர் 2%
**தேசிய விடுமுறை தினம்:** அசெர்பய்ஜான் ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட்ட மே மாதம் 28 ஆம் திகதி.
**சோவியத் யூனியனில் இருந்து சுதந்திரமடைந்தது:** 1991 ஓகஸ்ட் 30 பிரகடனப்படுத்தப்பட்டு, 1991 ஒக்டோபர் 18 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டது.
**நாணய அலகு:** மனட் (Manat)
**இணையத்தளக் குறியீடு:** .az
**சர்வதேச தொலைத்தொடர்பு இலக்கம்:** +994



## பொருளாதாரம்

5.243 மில்லியன் உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தைக் கொண்டது அசெர்பய்ஜான்.பருத்தி, தானிய வகைகள், நெல், திராட்சை உட்பட பல்வேறு பழவகைகள், மரக்கறி வகைகள், தேயிலை, புகையிலை என்பன முக்கிய விளைபொருட்களாக இருக்கின்றன. ஆடு, மாடு, பன்றி, செம்மறியாடு என்பன விலங்கு வேளாண்மையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

பெற்றோலியம், இயற்கை வாயு, பெற்றோலிய உற்பத்திகள், எண்ணெய்ச் சுத்திகரிப்பு, இரும்புருக்கு, சீமெந்து, ரசாயன மற்றும் ரசாயன திரவப் பொருட்கள், புடவைக்கைத்தொழில் என்பன அசெர்பய்ஜானின் முக்கிய கைத்தொழில் நடவடிக்கைகளாகும்.

**ஏற்றுமதி:** ஏற்றுமதியில் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு 90% வகிக்கின்றன. இயந்திரங்கள், பருத்தி, உணவுப் பொருட்கள் என்பன ஏற்றுமதியில் மிகுதிப் பங்கினை வகிக்கின்றன.

**இறக்குமதி:** இயந்திரங்கள், எண்ணெய் உற்பத்திப் பொருட்கள், உணவுப் பொருட்கள் ஆகியன ரசாயனப் பொருட்கள் இறக்குமதியில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** இத்தாலி, இஸ்ரேல், துருக்கி, பிரான்ஸ், ரஷ்யா, ஈரான், ஜோர்ஜியா ஆகிய நாடுகள் திகழ்கின்றன.

பொருளாதார வளர்ச்சிக் குறியீட்டில் உலக சாதனை புரிந்த நாடு. மிகப்பெரும் எண்ணெய் சக்திவள நாடாக உருமாறத் தயாராகும் முன்னாள் சோவியத் குடியரசு.



பிரதமர் ஆர்துர் ரசிஸாடே — ஜனாதிபதி இல்ஹாம் அலியேவ்

## தகவல் தொழில்நுட்பம்

பிரதான தொலைபேசிப் பாவனையாளர்களின் தொகை - 1,189 மில்லியன் (2006 இல்)
கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களின் தொகை - 3,324 மில்லியன் (2006)
வானொலி நிலையங்கள்: AM 10, FM 17 உட்பட SW-1(1998)
தொலைக்காட்சி நிலையங்கள்: 2 (1997)
இணையத்தளங்கள்: 3067 (2007)

## போக்குவரத்து

புகையிரத சேவை: 2122 கி.மீற்றர் (2006)
பெருந்தெருக்கள்: 59141 (கி.மீற்றர்)
துறைமுகம்: பாகு
விமான நிலையங்கள் : 35 (2007)



தேசிய இலச்சினை



## காலநிலை

பொதுவாக இடைவெப்ப வலயத்திற்குரிய காலநிலையைக் கொண்ட அசெர்பய்ஜான் பல்வேறு பிராந்திய காலநிலை வேறுபாடுகளைக் கொண்டு விளங்குகின்றது. இவற்றில் ஸ்கென்டிநேவிய, சைபீரிய, ஆர்க்டிக் மற்றும் மத்திய ஆசிய சிறப்புக் காலநிலை மிக முக்கியமானதாகும்.

மிகக் குறைந்த வெப்பநிலையாக 33°C யும் மிகக்கூடிய வெப்ப நிலையாக 46°C யும் நிலவுகின்றது. வருடாந்த மழைவீழ்ச்சிஅதிகபட்சமாக 1600 முதல் 1800 மி.மீற்றர் வரையும் குறைந்த மழைவீழ்ச்சியாக 200 முதல் 350 மி.மீற்றர் வரையும் கிடைக்கின்றது.


## தேசிய கீதம்

Azerbaycan! Azerbaycan!
Ey qehreman ovladin sanli Veteni!
Senden otru can vermeye cumle haziriz!
Senden otru qan tokmeye cumle qadiriz!....என்று ஆரம்பமாகிறது.

**தேசிய சின்னங்கள் (மலர், மிருகம், மரம்....):** தெரிவு செய்யப்படவில்லை.



பாகு துறைமுகம்



தலைநகர் பாகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**'ஆரம்ப காலத்தில் முதலாளித்துவ அமைப்புகள் தோன்றி, தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பை முழுமையாகச் சுரண்டி, அவர்களை அடிமைகளாக்கின. இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்கு தொழிலாளர்கள் உலகின் பல்வேறு இடங்களில் தங்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பினார்கள்; பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள்; சிலர் உயிர்த் தியாகங்களைக் கூடச்செய்தார்கள்'**

## தொழிலாளர்களின் உயிர்த் தியாகத்துடன் ஆரம்பமான

# 'மே தினம்'

ஐக்கிய அமெரிக்காவின் சிகாகோ நகர தொழிலாளர்கள் தம் உயிரைத் தியாகம் செய்தும் இரத்தம் சிந்தியும் உருவாக்கிய மே தினம், உலகின் சகல நாடுகளிலும் சர்வதேச தொழிலாளர் தினமாக மே, 1 ஆம் திகதி நினைவு கூரப்படுகின்றது. இலங்கையிலும் கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பிருந்தே மே தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### கைத்தொழில் புரட்சி

கைத்தொழில் புரட்சி எனும் இரத்தம் சிந்தாத தொழிற்புரட்சியானது விஞ்ஞான, தொழில்நுட்ப ரீதியில் மாத்திரமல்லாமல் மனிதனின் வாழ்க்கையிலும் சமூகக் கட்டமைப்புகளிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.தொழில் புரட்சியின் விளைவாக நகரங்களில் கைத்தொழிற்சாலைகள் பெருகின. எனினும், வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் போதியளவு இருக்கவில்லை. இதனால் கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் குறைந்தளவு தொழிலாளர்களிடம் அளவுக்கு மீறி வேலைவாங்கினர்; ஒரு நாளைக்கு 15 முதல் 16 மணி நேரம் வரை வேலை வாங்கியதோடு, அவர்களுக்கு சிறு தொகைப் பணத்தையே சம்பளமாகக் கொடுத்தனர். வருடத்திற்கு 365 நாட்களும் ஓய்வின்றி வேலை வாங்கினர்.

இதேவேளை, கைத்தொழில் புரட்சியின் ஆரம்ப காலகட்டத்தில் முதலாளித்துவ அமைப்புகள் தோன்றி, தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பை முழுமையாகச் சுரண்டி, அவர்களை அடிமைகளாக்கின. இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்கு தொழிலாளர்கள் உலகின் பல்வேறு இடங்களில் தங்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பினார்கள்.

### அன்றைய மே தினம்

ஆரம்ப காலங்களில் மக்கள் மே மாதம் முதலாம் திகதியை 'மே தினம்' என்றழைத்து, அந்த நாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடினர். பண்டைய ரோமானியர்கள் அன்றைய தினத்தன்று வயல்வெளிகளில் கூடி, ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். மத்திய காலத்தில் மக்கள் மே தினத்திற்கு முந்தைய நாளே கானகம் சென்று, விருந்துண்டு மகிழ்வர்.மறுநாள் அதிகாலை வீடு திரும்புவார்கள். வட இங்கிலாந்தில் மே தினத்திற்கு முதல் நாள் இரவை, 'விஷ இரவு' என அழைத்து சில கேளிக்கைகளில் ஈடுபடுவர்.



உதாரணமாக; வியாபார நிலையங்களின் பெயர்ப்பலகைகளை மாற்றி விடுவர். பிரித்தானியாவின் சில பகுதிகளில் 'மே தின ராணி' தேர்ந்தெடுக்கப்படுவதோடு, 'ஹேய்ஸ்' என்ற இடத்தில் மே தின ராணிக்கு மகுடம் சூட்டி மகிழ்வர். இவ்வாறாக கொண்டாடப்பட்ட மே தினம், 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொழிலாளர் தினமாக மாறியது.

### இன்றைய மே தினம்



மே தின கொண்டாட்டங்கள்

உலகத் தொழிலாளர் உரிமைப் போராட்ட வரலாற்றில்,1886 இல் ஐக்கிய அமெரிக்காவின் சிகாகோ நகரில் முக்கிய நிகழ்வொன்று நடந்தது. 'மேர்காமின் ஹார்வெஸ்டர் வேர்க்ஸ்' தொழிலாளர், வேலை நிறுத்தத்தின்போது, பொலிஸாரின் தாக்குதல்களால் ஆயிரக் கணக்கானோர் காய முற்றனர். அந்த இடத்தில் மட்டும் 4 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். அதனுடன் தொடர்புடைய மற்றுமொரு சம்பவத்தில் 4 பேருமாக, மொத்தம் 8 பேர் கொல்லப்பட்டனர்.இந்த இரத்தம் சிந்திய போராட்டத்தின் வெற்றியாக, அவர்களது நியாயமான கோரிக்கையான 8மணி நேர வேலை, 8 மணிநேர ஓய்வு (அறிவு வளர்ச்சி, சிந்தித்தல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்திட), 8 மணி நேர உறக்கம் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இச்சம்பவத்தை நினைவுகூரவும் 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்ற கோரிக்கையை பலப்படுத்தவும் 1889 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பெரிஸில் நடைபெற்ற 2 ஆவது சர்வதேச தொழிலாளர் கொங்கிரஸ் கூட்டத்தில், அதுவரை வழக்கத்தில் இருந்த குதூகல கொண்டாட்ட மே தினத்தை,'தொழிலாளர் மகிழ்ச்சிதான் உலக சுபீட்சத்திற்கு வழிகோலும்' என்ற சிந்தனையோடு, தொழிலாளர் தினமாக பிரகடனப்படுத்தினர். அன்றிலிருந்து பல நாடுகள் படிப்படியாக இத்தினத்தை தொழிலாளர் தினமாகக் கொண்டாடத் தொடங்கின.

### சர்வதேச தொழிலாளர் தினம்

தற்போது மே மாதம் முதலாம் திகதி அனைத்து உலக நாடுகளிலும் சர்வதேச விடுமுறைத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தினத்தில் தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடியவர்கள் கௌரவிக்கப்படுவதோடு, புரட்சியின்போது உயிர் நீத்தவர்களும் நினைவு கூரப்படுகின்றனர். இம்முறை அனுஷ்டிக்கப்படவுள்ள மே தினமானது 119 ஆவது மே தினம் என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கையில் மே தினம்

இலங்கையில் முதன்முதலாக கொழும்பில் திரு.ஏ.ஈ.குணசிங்க தலைமையில் மே தினம் கொண்டாடப்பட்டது. ஆனால், 1955 ஆம் ஆண்டுதான் மே தினம் ஒரு பொது விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.ஆனால்,மலையக மக்களுக்கோ 10வருடங்களுக்குப் பின்னரே அதாவது, 1965ஆம் ஆண்டே மே தினம் பொது விடுமுறைத் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.


-ஜெ




மே தின ஊர்வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தேர்தல் கண்



இந்திய தேசிய கொடி

## உலகின் ஜனநாயக நாடுகளிலேயே அதிக சனத்தொகை கொண்ட பெரிய நாடாக இந்தியா திகழ்கின்றது. 1947 இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றுவரை உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகவும் விளங்குகின்றது

இந்தியாவில் கடந்த 16 ஆம் திகதி பொதுத்தேர்தல் ஆரம்பமானது. சுமார் 112 கோடி சனத்தொகையையும் பாரிய நிலப்பரப்பையும் கொண்ட நாடாகத் திகழ்வதால், இந்தியாவில் ஒரே நாளில் தேர்தல் நடாத்துவது சாத்தியப்படாத ஒரு விடயமாகும். அதனால், ஏப்ரல் 16 முதல் மே மாதம் 13 ஆம் திகதி வரை பல்வேறு மாநிலங்களில், ஐந்து கட்டங்களாக தேர்தல் நடத்தப்படுகின்றது. இம்முறை தேர்தலில் வாக்களிக்க சுமார் 70 கோடி மக்கள் தகுதி பெற்றுள்ளனர்.


### ஐந்து கட்டங்களாக தேர்தல்

ஏப்ரல் 16 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ள தேர்தலானது எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறுவதற்கான சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து வாக்களிப்பு ஆரம்பமாகியபோதும் மே 13 ஆம் திகதி இறுதி வாக்களிப்பு முடிந்த பின்னரே தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கும்.

### பிரதான கட்சிகள்

நாடாளுமன்றத்தின் இரு சபைகளாகிய லோக் சபை மற்றும் அரச சபை ஆகியவற்றில் இப்பொழுது லோக் சபைக்குரிய தேர்தலே நடைபெறுகின்றது. லோக் சபையை 'கீழ்சபை' என்றும் அழைப்பர். இந்தத் தேர்தல்தான் இந்தியாவின் மத்திய அரசை நிறுவுவதைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான பொதுத்தேர்தலாகக் கருதப்படுகின்றது. லோக் சபைக் கான 545 மொத்த ஆசனங்களில் 543 ஆசனங்களுக்கான தேர்தலே இப்பொழுது நடைபெறுகின்றது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் செல்வாக்குப் பெற்றுள்ள சிறிய மாநிலக்கட்சிகள் உட்பட இரு பெரும் பிரதான கட்சிகளாக கொங்கிரஸ் மற்றும் பாரதீய ஜனதாக் கட்சி ஆகியன தேர்தலில் போட்டியிடுகின்றன.

இதில் முக்கிய கட்சிகளான ஆளும் கொங்கிரஸ் கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சிக்கும் இடையிலேயே பெருமளவு போட்டி நிகழ்கின்றது. இதுவரையிலான கருத்துக்கணிப்பின்படி, கொங்கிரஸ் கட்சி முன்னிலையில் இருந்தாலும் தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய பெரும்பான்மை பலம் அக்கட்சிக்கு கிடைக்க வாய்ப்பில்லை என்றே கருதப்படுகின்றது. எனவே, இவ்விரு கட்சிகளும் ஏனைய சிறு அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




இந்தியாவில் தேர்தல் நடைபெறும் தினங்கள்




सत्यमेव जयते

> **பிரதமரும் அவரின் தலைமையிலான அமைச்சரவையுமே நாட்டின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாகும். அதன்படி, நாட்டின் அரசையும் அதற்குத் தலைமை தாங்கும் பிரதமரையும் தெரிவு செய்வது இந்த பொதுத்தேர்தல் ஆகும்**

### மூன்றாவது அணி

இதற்கிடையில் இவ்விரு கட்சிகளுக்கும் மாற்றீடாக சிறு கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து, மூன்றாவது அணியொன்றைப் பலப்படுத்தி, ஆட்சி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இம்முயற்சியில் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் உத்தரப் பிரதேச மாநில முதல்வர் மாயாவதியின் தலைமையிலான 'பகுஜன' கட்சியும் தமிழகத்தின் 'திராவிட முன்னேற்றக் கழகமும்' ஆட்சி அமைப்பதில் பங்கு கொள்ளும் வாய்ப்புகள் அதிகம் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதேவேளை, இந்த மூன்றாவது அணியின் ஆட்சியமைப்பு முயற்சி இரு பிரதான கட்சிகளுக்கும் தலையிடியைக் கொடுத்துள்ளன. மேலும், மாநிலக் கட்சிகளின் செல்வாக்கின் காரணமாக அவை கணிசமான ஆசனங்களைப் பெறும் வாய்ப்பு இருப்பதால், பிரதான இரு கட்சிகளும் தனித்து ஆட்சி அமைப்பதில் பெரும் சவால்களை எதிர்நோக்கும். இதனால், கூட்டணி ஆட்சி அமைக்கும் வாய்ப்பே அதிகம் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



### அரசியல் சிக்கல்கள்

கடந்த 5 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த கொங்கிரஸ் அரசு, நாட்டின் தேசிய பொருளாதாரத்தை 9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இது பாரதீய ஜனதாக் கட்சிக்கு பாரிய பின்னடைவாகும். அத்துடன், பாரதீய ஜனதாக் கட்சியின் மதவாதப் போக்கு முஸ்லிம்களையும் சீக்கியர்களையும் அதிலிருந்து அந்நியப்படுத்தியுள்ளது.



அதேவேளை, கொங்கிரஸ் கட்சியும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் நன்கு அபிவிருத்தி அடைந்தபொழுதிலும் அது சாதாரண பொதுமக்களைச் சென்றடையவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகின்றது. அத்துடன், சோனி காந்தி இத்தாலியர் என்ற எண்ணம் சில இந்தியர்கள் நிலவுகின்றது.

இந்திய வாக்காளர்களில் சுமார் 25 வீதமானோர் குறைந்தவர்களாவர். எனவே, இவ் இளம் வாக்கா ஆளும் கொங்கிரஸ் கட்சி, சோனியா காந்தியின் ம முன்நிறுத்தியுள்ளது. அத்துடன், தற்போது கட்சியி அவரது பெயர் முன்மொழியப்பட்டுள்ளது. இதே கட்சி முன்னிலைப்படுத்திய வருண் காந்தி முஸ்லி வெளியிட்ட கருத்துக்கள் இப்பொழுது நீதிமன்றம் மதவாதக் கருத்துக்கள் பாரதீய ஜனதாக் கட்சிக்கு ப ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்

ரதான
கொடுத்துள்ளன.
ல்வாக்கின்

ான

கள்


வாக்களிப்பதற்காக வந்திருந்த மக்களில் ஒரு பகுதியினர்

## தேர்தலின் முக்கியத்துவம்

இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஜனாதிபதி இருப்பினும் பிரதமரே அதிக அதிகாரமுடையவராவார். பிரதமரும் அவரின் தலைமையிலான அமைச்சரவையுமே நாட்டின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாகும். அதன்படி, நாட்டின் அரசையும் அதற்குத் தலைமை தாங்கும் பிரதமரையும் தெரிவு செய்வது இந்த பொதுத்தேர்தல் ஆகும். நாட்டின் நாடாளுமன்றம் என அழைக்கப்படும் லோக் சபையின் மொத்த ஆசனங்கள் 545 ஆகும். இதில் அதிக ஆசனங்களைப் பெற்ற கட்சி அல்லது கூட்டணியில் இருந்து பிரதமர் தெரிவு செய்யப்படுவதோடு, அவரின் தலைமையில் அக்கட்சி அல்லது கூட்டணி ஆட்சி அமைக்கும். அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களதும் அரசினதும் ஆட்சிக்காலம் 5 வருடங்கள் மாத்திரமே. அதன்பின் அடுத்த பொதுத்தேர்தல் நடாத்தப்படும்.


மன்மோகன் சிங் மற்றும் சோனியா காந்தி

## இந்திய அரசியலமைப்பு

'ஒன்றுபட்ட இந்தியா' என்ற அடிப்படைத் தத்துவத்தை லட்சியமாகக் கொண்டு, அறிஞர்கள் பலரால் புடமிடப்பட்டு அமைக்கப்பட்டதே இந்திய அரசியல் சாசனமாகும். இந்தியா சர்வ அதிகாரங்களையும் பெற்ற ஒரு சோஷலிஸ, ஜனநாயக, மதச்சார்பற்ற நாடு என்று அரசியல் அமைப்பின் முன்னுரை கூறுகிறது. சமூக, பொருளாதார, அரசியல், நீதி மற்றும் பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துக்கூறும் உரிமை, பதவி, கல்வி, தொழில் இவற்றில் அனைவருக்கும் சமஉரிமை போன்ற மிக உன்னத நியதிகளை இது உறுதிப்படுத்துகிறது. அத்துடன், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஒருமைப்பாடு இவற்றை வளர்க்கப் பாடுபடுத்தல் என்பன இந்திய அரசியல் சட்டத்தின் சிறப்பம்சங்களாகும்.

இந்திய அரசியல் அமைப்பின் முன் வரைபு, அரசியல் நிர்ணய சபையில் விவாதிக்கப்பட்டு, 1949 ஆம் ஆண்டு நொவெம்பர் 26 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்பு 1950 ஜனவரி 26 இல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

குடியரசுத் தலைவர் - ஜனாதிபதி மத்திய அரசின் மிக உயர்ந்த நிர்வாக அதிகாரங்கள் படைத்த தலைவர். முப்படைகளுக்கும் அவரே தலைவர். எனினும், அவர் மத்திய அமைச்சரவையின் தலைவரான பிரதமரின் ஆலோசனைப்படியே செயல்படுவார். நாடாளுமன்றத்தின் பரிந்துரைகளை மீண்டும் திருப்பி அனுப்பவும் மறுபரிசீலனை செய்ய உத்தரவிடவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

## பிரதமர்

நாடாளுமன்றத்தின் லோக் சபையில் அதிக எண்ணிக்கையில் தொகுதிகளைக் கைப்பற்றிய அரசியல் கட்சியின் தலைவரே அமைச்சரவைத் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவார். அமைச்சரவைத் தலைவர் கூறும் ஆலோசனைப்படி குடியரசுத் தலைவர் இயங்க வேண்டியிருப்பதால், உண்மையில் பிரதமர்தான் அரசியல் சாசனம் வழங்கிய அதிகாரங்களைக் கையாண்டு, நாட்டை வழிநடத்துகிறார் எனலாம்.

## அமைச்சரவை


இது கூட்டுப்பொறுப்புடைய ஓர் அமைப்பு. நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்டது. இதில் 'கெபினட்' தகுதியுள்ள அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் ஆகிய பதவிகள் உள்ளன. அமைச்சரவையின் தீர்மானங்கள், சட்டம் இயற்றும் ஆலோசனைகள் போன்றவற்றை பிரதமர், குடியரசுத் தலைவருக்குத் தெரியப்படுத்துவார்.

## நாடாளுமன்றம்

குடியரசுத் தலைவரும் இரு சபைகளும் அடங்கிய நாடாளுமன்றம் சட்டமியற்றும் அதிகாரம் படைத்தது. லோக் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 545 இற்கு மிகையாகாமல் இருக்கவேண்டும். அரச சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 250 இற்கு மிகையாகாமல் இருக்கவேண்டும். (தற்போது லோக் சபையில் 545 இடங்களும் மேல் சபையில் 245 இடங்களும் உள்ளன) இவர்களில் 525 பேர் மாநிலங்களிலிருந்தும் 18 பேர் மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தில் இருக்கும் மத்திய ஆட்சிப்பகுதியில் இருந்தும் 2 பேர் ஆங்கிலோ-இந்திய வம்சாவழி நியமனம் மூலமும் தேர்ந்தெடுக்கப்படுவர். மாநிலங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 233 உறுப்பினர்களையும் சமூக சேவை போன்ற துறைகளிலிருந்து தெரிவான 12 பேரையும் குடியரசுத் தலைவர் அரச சபைக்கு நியமிப்பார்.

நாடாளுமன்ற ஆயுட் காலம் 5 ஆண்டுகள். ஆனால், அரச சபை கலைக்கப்படுவதில்லை. இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை 1/3 பங்கு உறுப்பினர்களின் இடங்கள் காலியாகின்றன. உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் ஆகும்.

-இரஞ்சித் ஜெயகர்


நவீன தொழில்நுட்ப முறையில் வாக்களித்தல்


பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி

ருந்தது.
ட்சிக்கு
ம்.
சியின்
ளயும்

ட்சியும்

ளாதாரம்
ாழுதிலும் அது
றடையவில்லை
). அத்துடன், சோனியா
ம் சில இந்தியர்களிடம்

ர் 25 வீதமானோர் 25 வயதிலும்
வ் இளம் வாக்காளர்களைக் கவரும் நோக்கில்
னியா காந்தியின் மகன் ராகுல் காந்தியை
தற்போது கட்சியின் தலைமைப் பதவிக்கும்
பட்டுள்ளது. இதேவேளை, பாரதீய ஜனதாக்
ருண் காந்தி முஸ்லிம்களுக்கு எதிராக
பாழுது நீதிமன்றம் வரை சென்றுள்ளன. இவரின்
ஜனதாக் கட்சிக்கு-பல சிக்கல்களை
டத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையே பலம்



சத்யனும் அருணும் இணைபிரியா நண்பர்கள். ஒரே பாடசாலையில் கல்வி பயில்பவர்கள். ஒருநாள் சத்யனும் அருணும் காட்டுப்பாதை வழியாகச் சென்று கொண்டிருந்தனர். அப்போது, அவர்கள் செல்லும் பாதையில் திடீரெனப் புகை ஒன்று தோன்றியது. அத்துடன், அவர்களின் கண்முன்னே விகாரமான தோற்றமுடைய ஓர் உருவம் தோன்றியது. அதைப் பார்த்து இருவரும் அதிர்ந்து போய் நின்றனர். மறுகணமே பயந்து ஓடமுற்பட்டனர். உடனே அந்த உருவம் ''நில்லுங்கள்! உங்கள் இருவரில் எல்லாவிதத்திலும் உயர்ந்த ஒருவர் என்னுடன் வந்தால் கனவிலும் காணாத வைரங்களையும் பொற்காசுகளையும் பொன்னாலான ஆடைகளையும் தருவேன். உங்களில் யார் உயர்ந்தவர்?'' என அந்த உருவம் கேட்டது. அதைக் கேட்ட அருணுக்கும் சத்யனுக்கும் பேராசை கண்ணை மறைத்தது. உடனே அருண், ''நான்தான் இவனைவிட உயர்ந்தவன். என்னை உன்னுடன் கூட்டிச் செல்'' என்றான். சத்யன், ''இல்லை இல்லை நான்தான் இவனை விட எல்லாவிதத்திலும் உயர்ந்தவன். என்னை உன்னுடன் கூட்டிச் செல்'' என்று கூறினான். இருவருக்குமிடையில் இதுவரை காலமும் இருந்திராத பொறாமை உணர்வு ஏற்பட்டு இருவரும் கைகலப்பில் ஈடுபட்டனர். அதேவேளை, துர்தேவனாகிய அந்த உருவம் சிரித்தபடியே மறைந்தது. இவையனைத்தையும் வெகுநேரமாகக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு முனிவர் இருவரிடமும் வந்து ''நிறுத்துங்கள் உங்களிடையே சண்டை வேண்டாம்'' என்று கூறினார். அருணும் சத்யனும் சண்டையை நிறுத்தினர். முனிவர், ''நீங்களிருவரும் வைரங்களுக்காகவும் பொற்காசுகளுக்காகவும் பொன்னாலானா ஆடைகளுக்காகவும் புனிதமான நட்பை அவமதித்துவிட்டு சண்டை செய்கிறீர்கள். உங்களுக்கே இது கேவலமாகத் தெரியவில்லையா?'' என்று கேட்க, சத்யனும் அருணும் வெட்கித் தலை குனிந்தார்கள். பிறகு ''ம்... வாருங்கள் என்னுடன்'' என்று இருவரையும் ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று காட்டினார். அந்த முனிவர். அவ்விடத்தைக் கண்ட அருணும் சத்யனும் அதிர்ந்து போய் சிலை போல் நின்றனர். அவ்விடத்தில் ஆங்காங்கே மனித எலும்புக் கூடுகளும் மண்டை ஓடுகளும் சிதறிக் கிடந்தன.

''பார்த்தீர்களா? இதுதான் அந்தத் துர்தேவனின் இருப்பிடம். அவன் இங்கே வருபவர்களை அது தருவேன் இது தருவேன் என்று ஏமாற்றி இவ்விடத்திற்கு கூட்டி வந்து கொன்று தின்னும் வழக்கமுடையவன். இங்கே சிதறிக் கிடக்கும் எலும்புகள், மண்டை ஓடுகள், எலும்புக்கூடுகள் எல்லாம் அவனின் கபடப் பேச்சைக் கேட்டு ஏமாந்தவர்களுடையவைதான். நல்லவேளை, கடவுள் புண்ணியத்தால் நான் உங்களைக் கண்டதால் தப்பினீர்கள். இனிமேல் இப்படி நடந்து கொள்ளாதீர்கள். நான் வருகிறேன்'' என்று கூறிச் சென்றார். சத்யன் அருணிடமும் அருண் சத்யனிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். இனிமேல் எம் இருவருக்கும் இடையில் விளையாட்டாகவேனும் சண்டை நடக்காது என்று ஒருவருக்கொருவர் உறுதி மொழிகளைக் கூறி, தாம் வந்த பாதையை நோக்கிச் சென்றனர்.

**மர்ஸியா நாபிர்,**
**பேருவளை.**




# மாயா நாகரிகம்



அமெரிக்காவிற்கு ஐரோப்பியர்கள் வந்தபோது அங்கே வாழ்ந்த இனத்தவர் 'மாயா' இனத்தவர்கள் எனப்பட்டனர். மத்திய அமெரிக்காவில் மிகவும் அபிவிருத்தியடைந்திருந்த நாகரிகமாக மாயா நாகரிகம் விளங்கியது. இந்த இனத்தவர்கள் மிகவும் சிறந்த வானியலாளர்கள். 20 தினங்கள் கொண்ட 18 மாதங்களும் 5 கிழமைகள் கொண்ட 1 மாதமும் உள்ள நாட்காட்டியே இவர்களின் பாவனையில் இருந்துள்ளது. வியாபாரமும் விவசாயமும் இவர்களது ஜீவனோபாய வழியாக இருந்தன.சோளம்,தக்காளி, போஞ்சி,உருளைக்கிழங்கு ஆகியனபயிரிடப்பட்டன. கால்நடை வளர்ப்பு இவர்களிடம் காணப்படவில்லை.

வேட்டையாடுதலும் மீன்பிடித்தலுமே இவர்களிடம் காணப்பட்டன. இவர்களில் அநேகமானோர் காடுகளை அண்டிய பிரதேசங்களிலேயே வாழ்ந்துள்ளனர். இவர்கள் வியாபாரங்களின் போதும் சமய உற்சவங்களின்போதும் மட்டுமே நகரங்களுக்கு வந்து சென்றனர். கணித முறையும் அறிக்கை முறையும் அவர்களிடம் காணப்பட்டன. இவர்களின் நாகரிகம் ஸ்பானியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

**ஏ.சேஷ்திரினி,**
**மா/பாக்கியம் தே.கல்.,**
**மாத்தளை.**



# மனமகிழ்வு தந்த மாலை

தேன் சிந்தும் செந்நிற
வானின் அழகைக் கண்டேன்!
மலர்களில் தேன் பருக
வந்த வண்டுகளைக் கண்டேன்!
எங்கிருந்தோ வந்த காற்றில்
அசைந்தாடிய மரங்களைக் கண்டேன்!
இதுபோல இன்னும் பல
எழில்களைக் கண்டேன்!
பறவைகள் கூடுகள் நோக்கி!
பறக்கும் காட்சி கண்டேன்!
வானில் இடையிடையே சூழ்ந்த
கரு நிற மேகம் கண்டேன்!
அதன் பின்னர் பெய்த
மழையில் நனைந்து மகிழ்ந்தேன்!
நாளையும் இதுபோன்ற பல
காட்சிகளைக் காண்பேனோ!
நாளை மாலை எப்போது
வரும் என ஏங்குகிறேன்!

**பா.நளின்குமார்,தெரணியகலை.**

# விசித்திர எறும்புகள்

## தேன் எறும்பு

தென் அமெரிக்காவில் காணப்படும் தேன் எறும்புகள் தேனைச் சேகரித்து, தமது பை போன்ற உறுப்பில் சேர்த்து வைக்கின்றன. சாதாரண தேனைப் போன்றே இந்த எறும்புகளின் தேனையும் அமெரிக்கர்கள் பயன்படுத்துகின்றார்கள்.



## கூட்டுறவு எறும்பு

இவை கூட்டம் கூட்டமாக வாழும் இயல்புடையவை. இவற்றின் புற்றுக்களை வெள்ளம் சூழ்ந்து கொண்டால், ஒன்றையொன்று பந்து போல் கட்டிக்கொண்டு, தண்ணீரில் மிதந்து சென்று மேடான இடங்களில் ஏறிக்கூடி வாழ்கின்றன.

## காந்த எறும்பு

அவுஸ்திரேலியாவில் காணப்படும் இவ்வின எறும்புகள் பெரிய புற்றுக் களைத் தெற்கு வடக்காகக் கட்டுகின் றன. எனவே, இவற்றிற்கு 'காந்த எறும்புகள்' என்று பெயர் வழங்கப்படுகின்றது.

## வெள்ளை எறும்பு

வெண்ணிறமாக



இருக்கும் இந்த எறும்புகள் குளிர்ந்த இடங்களில் கூடு கட்டி வாழும். இவை முட்டையிட்டு இனத்தைப் பெருக்கும். இம்முட்டைகள் தோன்றும்போது சிறியனவாக வெளிவரும். வெளிவந்த பின் இவை வளர்கின்றன.



## பிஸ்கட் எறும்பு

இங்கிலாந்தில் காணப்படும் இவ்வின எறும்புகள் தாம் சேகரித்த தானியங்களை மாவாக்கி அவற்றைச் சிறு உருண்டைகள் போல் திரட்டி உலர வைத்து 'பிஸ்கட்' போல் செய்கின்றன. பின்னர் இவற்றைத் தேவையான போது உபயோகப்படுத்துகின்றன.

**எம்.எல்.எஃப்.ஹஸ்னா,**
**இ/பாலர் இயேசு கன்னியர் மடம்,**
**தேசிய பாடசாலை.**
**இரத்தினபுரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அங். இல : 2639
எம்.இல்ஹாம், தரம் - 6, பூ.த.ம.வித்., பூண்டுலோயா.


அங். இல : 2640
எஃப்.றிஸ்னா, தரம் - 6, தாலிம் கல்., காலி.


அங். இல : 2641
ஷ.மியான், தரம் - 9, இந்துக் கல்., திருகோணமலை.


அங். இல : 2642
எம்.சாஜித், தரம் - 9, அந்நாசர் வித்., மட்டக்களப்பு.


அங். இல : 2643
ர.திலக்ஸிகா, தரம் - 7, விபுலானந்தா கல்., வவுனியா.


அங். இல : 2644
நி.ராஜசேகர், தரம் - 6, நல்லாயன் ம.கல்., கண்டி.


அங். இல : 2645
சி.ருஷாந்தினி, தரம் - 7, வடிவாம்பிகா த.ம.வித்., சிலாபம்.


அங். இல : 2646
ஆர்.இபாதா, தரம் - 7, முஸ்லிம் ம.ம.வித்., களுத்துறை.


அங். இல : 2647
ஏ.அப்துல்லா, தரம் - 6, ஸாஹிரா கல்., கொழும்பு.


அங். இல : 2648
எஃப்.அப்ரா, தரம் - 7, முஸ்லிம் ம.கல்., கொழும்பு.

# விஜய் மாணவர் கழகம்


அங். இல : 2649
எச்.ஹப்லான், தரம் - 9, அல்-முபாரக் தே.பாட., மள்வானை.


அங். இல : 2650
இஜாஸ் அஹமட், உயர்தரம், அல்-அஸ்ஹர் மு.ம.வித்., சீனக்குடா.


அங். இல : 2651
சே.சிவதர்சன், தரம் - 9, ம.தமிழ் ம.வித்., மடுல்சீமை.


அங். இல : 2652
ஆர்.லதுஷரன், தரம் - 7, ஹைலன்ட்ஸ் ம.கல்., டிக்கோயா.


அங். இல : 2653
பி.மேனகா, தரம் - 9, மஹா பெரியதன்ன த.ம.வித்., ரஜவெல்ல.


அங். இல : 2654
ந.நந்துஷன், தரம் - 5, மத்திய கல்., யாழ்ப்பாணம்.


அங். இல : 2655
பெ.ஜயனி, தரம் - 11, சித்திவிநாயகர் இ.கல்., மன்னார்.


அங். இல : 2656
எம்.இனாஸ், தரம் - 10, அல்-ஹிலால் வித்., சாய்ந்தமருது.


அங். இல : 2657
கோ.போசகாந், தரம் - 9, பூ.நல்லூர் ம.வித்., பூநகரி.


அங். இல : 2658
எஃப்.ஸஃபியா, தரம் - 2, மாளிகாஹேன ம.ம.வித்., பேருவளை.





**கைவண்ணங்கள்**
**த.பெ.எண் 2037**
**கொழும்பு**


டி.விதுர்ஷினி, தரம் - 6, பரி.யோவான் த.ம.வித்., இறக்குவானை.


வி.விதுஷன், தரம் - 4, ப/வேவல்ஹின்ன த.வித்., பதுளை.


எம்.என்.எஃப்.அஸ்மா, தரம் - 6, க/கழுகமுவ மத்திய கல்., கழுகமுவ.


சி.தர்மேந்திரன், தரம் - 11, கிளி/சிவபாத கலையகம், கிளிநொச்சி.


எம்.ஆர்.எம்.ரிஜ்வான், தரம் - 8, கு/கெட்டுவான ம.வித்., தோரயாய.


ஏ.எஃப்.சப்னா, தரம் - 7, கெப்பிடிய முஸ்லிம் வித்., கெப்பிடிய.



திருகோணமலை, தம்பலகமத்தைச் சேர்ந்த அருணகிரி-இந்திராணி தம்பதியரின் புதல்வர்களான நிதேஷனா, நிதேஷனன் ஆகியோர் 26.04.2009 அன்று தமது நான்காவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார்கள். இவர்களைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் இறை அருளினால் பல்கலையும் கற்று, சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: ஏ.பிரவீனன்)*

**விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு**



கல்முனை, 'Mother's Breath' முன்பள்ளிக் கல்வி நிலைய மாணவர்களின் கைத்திறன் கண்காட்சி, அண்மையில் கல்வி நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற மாணவர்களையே படத்தில் காண்கிறீர்கள்.

*(தகவல்: நிப்றாஸ் மன்சூர்-கல்முனை)*

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்;
## அடுத்த இதழில் எதிர்பாருங்கள்

**கைவண்ணங்கள் பகுதிக்காக நாம் கொடுத்த:**

தரம் 1-5 - எனது பூந்தோட்டம் அல்லது எனது செல்லப்பிராணி

தரம் 6-8 - துணி அலங்காரம் அல்லது புதிய பழரசம் ஒன்றுக்கான விளம்பரம்

தரம் 9-11 - மீன் பிடிப்போர் அல்லது வயலில் வேலை செய்வோர்

ஆகிய தலைப்புகளில் நீங்கள் வரைந்தனுப்பிய கைவண்ணங்களில் தெரிவு செய்யப்பட்ட கைவண்ணங்களை 'விஜய்' மே மாத இதழ்களில் எதிர்பாருங்கள்.

இவ்வாறு, இனிவரும் மாதங்களிலும் நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை அனுப்பத் தயாராகுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் ஆனந்தவுக்கும் மாமிக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

ආනන්ද: නැන්දේ මොන මොනවද ගන්න ඕනේ?
நெந்தே மொன மொனவத கண்ண ஓணே ?
ஆனந்த: மாமி என்னென்ன வாங்க வேண்டும்?



නැන්දා: පරිප්පු, එළවළු, මාලු.
பரிப்பு, எளவளு, மாலு.
மாமி: பருப்பு, மரக்கறி, மீன்.

ආනන්ද: මොන එළවළුද නැන්දේ?
மொன எளவளுத நெந்தே?
ஆனந்த: என்ன மரக்கறி மாமி?

නැන්දා: වම්බටු, මුරුංගා, කරවිල, තක්කාලි.
வம்படு, முருங்கா, கறவில, தக்காளி.
மாமி: கத்தரிக்காய், முருங்கக்காய், பாகற்காய், தக்காளி.

ආනන්ද: කොච්චර ගන්න ඕනේද නැන්දේ?
கொச்சற கண்ண ஓணேத நெந்தே?
ஆனந்த: எவ்வளவு வாங்க வேண்டும் மாமி?



නැන්දා: වම්බටු කිලෝ එකයි.
வம்படு கிலோ எகய்.
மாமி: கத்தரிக்காய் ஒரு கிலோ.

මුරුංගා කිලෝ එකයි.
முருங்கா கிலோ எகய்.
முருங்கக்காய் ஒரு கிலோ.

තක්කාලි ග්‍රෑම් පන්සීයයි. කරවිල ග්‍රෑම් පන්සීයයි.
தக்காளி கிரேம் பன்சீயய். கறவில கிரேம் பன்சீயய்.
தக்காளி ஐநூறு கிராம். பாகற்காய் ஐநூறு கிராம்.

ආනන්ද: මාලු මොනවද ඕනේ?
மாலு மொனவத ஓணே?
ஆனந்த: என்ன மீன் வேண்டும்?

නැන්දා: පරව් මාලුයි බල මාලුයි කිලෝ එකක් ගෙන්න.
பரவ் மாலுய் பல மாலுய் கிலோ எகக் கேன்ன.
மாமி: பாரை மீனும் சூரை மீனும் ஒரு கிலோ கொண்டு வாங்க.

ආනන්ද: හොඳයි නැන්දේ.
ஹொந்தய் நெந்தே.
ஆனந்த: நல்லது மாமி.

### பயிற்சி

பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: கத்தரிக்காய் ஒரு கிலோ.
වම්බටු කිලෝ එකයි.

i. என்ன மீன் வேண்டும்?

.......................................................

ii. பாரை மீன் ஒரு கிலோ கொண்டு வாங்க.

.......................................................






**'Was'** எனும் இறந்தகால துணை வினைச்சொல்லை (Past Tense Auxiliary Verb) நிகழ்கால எச்சவினைச் சொல்லுடன் (Present Participal) கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களை, 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைத்தல்.

(அ) He was reading.
அவன் வாசித்துக்கொண்டு இருந்தான். (உடன்பாடு)

**குறிப்பு:** மேற்படி 'உடன்பாடு' வாக்கியத்தில் காணப்படுகின்ற 'Was' எனும் துணை வினைச்சொல்லை மாத்திரம், அவ்வாக்கியத்தின் முன்னிலையில் இடம்பெறச் செய்கின்றபோது, அவ்வாக்கியம் 'வினா' வாக்கியமாக மாற்றமடைகின்றது. உதாரணத்தை இங்கே அவதானிப்போம்.

(ஆ) Was he reading?
அவன் வாசித்துக்கொண்டு இருந்தானா? (வினா)

✱ இவ்வாறே, ஏனைய வாக்கியங்களையும் அவதானிப்போம்.

(இ) He was reading a book.
அவன் ஒரு புத்தகம் வாசித்துக்கொண்டு இருந்தான். (உடன்பாடு)

(ஈ) Was he reading a book?
அவன் ஒரு புத்தகம் வாசித்துக்கொண்டு இருந்தானா? (வினா)

---

(அ) She was studying.
அவள் படித்துக்கொண்டு இருந்தாள். (உடன்பாடு)

(ஆ) Was she studying?
அவள் படித்துக்கொண்டு இருந்தாளா? (வினா)

(இ) She was studying English.
அவள் ஆங்கிலம் படித்துக்கொண்டு இருந்தாள். (உடன்பாடு)

(ஈ) Was she studying English?
அவள் ஆங்கிலம் படித்துக்கொண்டு இருந்தாளா? (வினா)

---

(அ) It was sleeping.
அது உறங்கிக்கொண்டு இருந்தது. (உடன்பாடு)

(ஆ) Was it sleeping?
அது உறங்கிக்கொண்டு இருந்ததா? (வினா)

(இ) It was sleeping on the floor.
அது நிலத்தில் உறங்கிக்கொண்டு இருந்தது. (உடன்பாடு)

(ஈ) Was it sleeping on the floor?
அது நிலத்தில் உறங்கிக்கொண்டு இருந்ததா? (வினா)

---

(அ) Ranjith was writing.
ரஞ்ஜித் எழுதிக்கொண்டு இருந்தான். (உடன்பாடு)

(ஆ) Was Ranjith writing?
ரஞ்ஜித் எழுதிக்கொண்டு இருந்தானா? (வினா)

(இ) Ranjith was writing a letter.
ரஞ்ஜித் ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருந்தான். (உடன்பாடு)

(ஈ) Was Ranjith writing a letter?
ரஞ்ஜித் ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருந்தானா? (வினா)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.


## ஒபாமா-சாவேஸ் சந்திப்பு!

டிரினிடாட்டில் நடைபெற்ற மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் வெனிசுவெலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் ஆகியோர் இரண்டு பேரும் சிநேகபூர்வ சந்திப்பொன்றை நடத்தியமை குறித்து உலக நாடுகள் பல தமது ஊடகங்களில் முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளன.



கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் ஆட்சிக் காலத்தின்போது அமெரிக்கா-வெனிசுவெலா நாடுகளுக்கிடையே பாரிய பனிப்போர் நடைபெற்றுவந்தது. எனினும், பராக் ஒபாமா பதவியேற்றதன்பின்னர், முன்னைய காலங்களில் முரண்பட்ட நிலையிலிருந்த தலைவர் களுடன் நட்பு ரீதியிலான தொடர்புகளை பேண முற்பட்டு வருகின்றார். இதன் ஒரு வெளிப்பாடாகவே வெனிசுவெலா ஜனாதிபதியை ஒபாமா சந்தித்துள்ளார். இந்த சந்திப்பின்போது வெனிசுவெலா ஜனாதிபதி சாவேஸ் அமெரிக்க ஜனாதிபதிக்கு அன்பளிப்பாக வழங்கிய ஒரு நூல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதுடன், அந்த நூலின் விற்பனையும் பெருகியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உருகுவே நாட்டைச் சேர்ந்த எடுவாடோ கெலியாயோ என்ற எழுத்தாளர் எழுதிய 'த ஓப்பன்வேன்ஸ் ஒஃப் லத்தின் அமெரிக்கா' என்ற அந்த நூலில் லத்தின் அமெரிக்க நாடுகளுக்கு அமெரிக்கா உட்பட உலக வல்லரசுகள் செய்த அநீதிகள் தொடர்பாகவே எழுதப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

## இந்திய தேர்தல்; வெற்றி யாருக்கு?



இந்தியாவில் ஐந்து கட்டங்களாக நடைபெறுகின்ற பொதுத் தேர்தல் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகியது. அதற்கமைய ஐந்து கட்டங்களாக நடைபெறுகின்ற இத்தேர்தலானது 16 ஆம், 23 ஆம், 30 ஆம், 7 ஆம், 13 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல்கள் செயலகம் முன்னமே அறிவித்திருந்தது.

இம்முறை தேர்தலிலும் இந்தியாவின் பிரதான கட்சிகளான காங்கிரஸ் கட்சிக்கும் பாரதீய ஜனதாக் கட்சி (பி.ஜே.பி) க்குமிடையே நேரடிப் போட்டி காணப்படுகின்றது. இந்த இரண்டு கட்சிகளுள் வெற்றி பெறும் கட்சியைச் சேர்ந்த பிரதம வேட்பாளரே நாட்டின் பிரதமராக நியமிக்கப்படுவார். அதன்படி காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றால் அக்கட்சியின் தற்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கும் பி.ஜே.பி வெற்றி பெற்றால் அக்கட்சியைச் சேர்ந்த பிரதம வேட்பாளர் எல்.கே.அத்வானியும் பிரதமராகத் தெரிவாவர்.



545 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தின் 543 ஆசனங்களுக்குரிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காகவே மேற்படி தேர்தல் நடைபெறுகின்றது. இதில் 278 இற்கும் மேற்பட்ட ஆசனங்களை வெற்றியீட்டும் கட்சியே ஆட்சி அமைக்கும் தகுதியைப் பெறும். மாறாக, பிரதான இரண்டு கட்சிகளும் தேவையான அளவு ஆசனங்களைப் பெறாவிட்டால் இதர உதிரிக் கட்சிகளின் ஆதரவைத் திரட்டி பெரும்பான்மையை நிரூபிக்கும் கட்சியே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'ஒஸ்கார்' படத்தின் சிறுமி ரூ.20 மில்லியனுக்கு விற்பனை?





இம்முறை எட்டு ஒஸ்கார் விருதுகளை வென்ற 'ஸ்லெம்டோக் மில்லியனர்' என்ற திரைப்படத்தில் நடித்த ஒன்பது வயதான ரூபினா அலீ என்ற சிறுமியை ரூ.20 மில்லியனுக்கு விற்பதற்கு சிறுமியின் தந்தை விருப்பம் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவித்திருந்தன.

சிறுமியின் தந்தையான ரஃபிக் குரேஷி தனது மகளை இவ்வாறு தத்துக்கொடுப்பதற்கு தீர்மானித்தமைக்கு கூறிய காரணம் என்னவென்றால், ''குப்பத்தில் வறிய வாழ்க்கை வாழ்கின்ற தனது மகள் அந்த வாழ்க்கையிலிருந்து மீண்டு சுகபோக வாழ்க்கையொன்றை வாழவேண்டும் என்பதற்காகவே இவ்வாறான தீர்மானத்திற்கு வந்ததாகக்'' குறிப்பிட்டுள்ளார்.

அவரது எதிர்பார்ப்புப் போலவே மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த குடும்பமொன்று மேற்படி சிறுமியை தமது வளர்ப்புப் பிள்ளையாக்கிக் கொள்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தத் தகவலை கேள்வியுற்ற பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கும் விதமாக சிறுமியின் தந்தையிடம் விசாரணை மேற்கொண்டபோது, தான் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். எனினும் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அற்லஸ் கேள்வி - 201

கேள்வி: இந்தியாவில் எத்தனை நாடாளுமன்ற ஆசனங்கள் உள்ளன?

சரியான விடை..........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 201,
[illegible] 2037, கொழும்பு.

### போட்டி இல - 199 இன் சரியான விடை: பதினொரு ஜனாதிபதிகள்

பரிசு பெறுவோர்

ம.நர்மதா,
113/1, திருவள்ளுவர் வீதி,
பாண்டிருப்பு-01, கல்முனை.

எம்.அனால் அஜ்மீர்,
207/1, தெமட்டகஹமுல்லதென்ன, அக்குறனை.

ச.நஸீமா,
12, கணேஸ் ஒழுங்கை, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்டி கால கலைகள்

கண்டி கால கலைகள், அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவைக் கால கலைகளுக்கு இரண்டாம் தரமானவை எனக் குறிப்பிட முடியாதவை. மாறாக, கண்டி கால கலைகள் அவற்றுக்கே உரிய தனித்துவமான தன்மைகளைக் கொண்டவை. இக்காலத்திற்குரிய தனித்துவமான சிற்பம், ஓவியக் கலைகள் உள்ளன. அவ்வாறே, இக்கலைகள் மேல்நாட்டு, கீழ்நாட்டுக் கலைகள் என இரு வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளன.

கீழ்நாட்டுக் கலை ஓவியங்களில் அந்நிய நாட்டுத் தாக்கம் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக உடை, ஆபரணங்களில் இந்த வேறுபாட்டை அவதானிக்கலாம். மேல்நாட்டு ஓவியங்களின் பின்தளத்தில் சிவப்பு நிறத்திற்குப் பதிலாக கறுப்பு நிறம் சார்ந்திருப்பதைக் காணலாம். அத்துடன், கண்டி கால கலைகளில் மரபு ரீதியான கிராமியக் கலைநுட்பம் காணப்படுவதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். கிராமிய மக்களின் மத ஈடுபாட்டை அடிப்படையாக வைத்தும் அவர்களின் மத ஈடுபாட்டை அதிகரிக்கும் நோக்கத்துடனுமான கலைத்துவம் மிக்க ஓவியக்கலையை கண்டி காலத்தில் காணக்கூடிய தாகவுள்ளது.

அவ்வாறே, இரண்டு கோடுகளுக்கிடையில் இடமிருந்து வலமாக, குறிப்பிட்ட ஒரு கதாபாத்திரத்தை மையமாகக் கொண்டு, கதை தொடரும் வண்ணம் ஓவியம் அமைந்திருப்பதை கண்டிகால கலை மரபில் பிரதானமாகக் காணமுடிகின்றது. இதனை தனித்துவமான ஓர் ஓவிய மரபாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அத்துடன், ஓவியத்தின் பின்னணி வர்ணமாக இளம் சிவப்பு நிறம் பயன்படுத்தப்பட்டிருக் கின்றது. மனித உருவத்துக்காக மஞ்சள் நிறமும் மனித உருவங்களில் ஆடை அலங்காரங்களுக்காக வெள்ளை நிறமும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஓவியங்கள் இரண்டு சிறப்பம்சங்களைக் கொண்டு வரையப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அதில் ஒன்று;ரேகைச் சித்திரமாகும். ரேகைகளால் சித்திரம் வரையப்பட்டு, வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. கண்டி சித்திரக் கலைக்கே உரித்தான இந்த முறை 'ரேகைக் காட்சித் தொகுப்பு' என்று அழைக்கப்படு கின்றது. அத்துடன், சித்திர வேலைப்பாடுகள் மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டிருப்பது மற்றொரு சிறப்பம்சமாகும்.

**அமீர் ஹுஸைசன்**



தெகல்தொருவ ஓவியமொன்று.



17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளுக்குரிய கண்டி சித்திர வேலைப்பாடு. இந்த வேலைப்பாடு கண்டி தலதா மாளிகைக் கூரையில் காணப்படுகின்றது.



17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளுக்குரிய ஓவியம். இதுவும் தலதா மாளிகையிலேயே உள்ளது.



கண்டி, கங்காராமவில் உள்ள ஓவியம்.

# முதல் 'எம்ப்யுலன்ஸ்'

மாவீரன் நெப்போலியனின் படைப்பிரிவில் பணியாற்றிய தலைமை மருத்துவர் டொமினிக் ஜின்லாரே என்பவர்தான் 'எம்ப்யுலன்ஸ்'என்ற வார்த்தையை முதன்முதலில் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தார். இதுவொரு பிரெஞ்ச் வார்த்தையாகும். பிரெஞ்ச் மொழியில் 'எம்ப்யுலன்ட்' என்றால் 'நகரும் மருத்துவமனை' என்று பொருள். அதன்படி முதல் எம்ப்யுலன்ஸ் வாகனம் இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்பே அறிமுகமாகி விட்டது.




முதலில் குதிரைகள் பூட்டிய வண்டிகளே 'எம்ப்யுலன்ஸ்' வண்டிகளாக இருந்தன. பின்னர் இது ரயில், கப்பல், விமானம் என விருத்தியடைந்தது.அப்பொழுது 'எம்ப்யுலன்ஸ்' வாகனம் சாதாரண வாகனத்தைப் போன்றே இருந்தது. எனினும் இதில் நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும்போது, வழியிலேயே பலர் உயிரிழக்க நேரிட்டது. எனவே, எம்ப்யுலன்ஸிலேயே ஒக்சிஜன் மற்றும் சில முதலுதவி மருந்துகளை உள்ளடக்கிய குட்டி மருத்துவமனை போன்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

அதன்படி, மோட்டார் வாகனத்தில் அமைக்கப்பட்ட உலகின் முதலாவது எம்ப்யுலன்ஸ், நியூயோர்க் நகரில் உள்ள 'பெவில்யூ' மருத்துவமனையில் 1869 ஆம் ஆண்டில் பொது நோயாளிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. அதன்பின்னர் உலகின் முதலாவது 'ஹெலிகொப்டர்' எம்ப்யுலன்ஸ் இரண்டாம் உலகப்போரின்போது செயல்பட்டது. 1970 க்குப் பின்னர் எம்ப்யுலன்ஸிற்காகவே பயிற்சி அளிக்கப்பட்ட மருத்துவர்கள், தாதிகள், உதவியாளர்கள் கடமையில் அமர்த்தப்பட்டனர். ஆபத்தில் உள்ள நோயாளிகளுக்கு அவர்கள் வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படும்வரை தேவையான உடனடி சிகிச்சை எம்ப்யுலன்ஸிலேயே அளிக்கப்பட்டது.



- ஜெ.டி.சோதுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசன் இவானும் சாம்பல் நிற ஓநாயும்

ரஷ்ய நாட்டுக்கதை 04



"ஏன் நீ இவ்வளவு மௌனமாகவும் வருத்தமாகவும் இருக்கிறாய். இளவரசன் இவான்?'' என்றது சாம்பல் நிற ஓநாய்.

''வருத்தப்படாமல் எப்படி இருப்பது, சாம்பல் நிற ஓநாயே? இத்தகைய அழகியைப் பிரிய என் மனம் சஞ்சலமுறுகிறது. ஒரு குதிரைக்காக நான் பேரழகி யெலேனாவை மாற்றிக் கொள்வதா?''

''இத்தகைய அழகியை நீ பிரிய வேண்டிய தேவை இல்லை. அவளை நாம் எங்காவது ஒளித்து வைப்போம். நானே பேரழகி யெலேனாவாக மாறுகிறேன். அரசரிடம் என்னை நீ அழைத்துச் செல்''

பேரழகி யெலேனாவைக் காட்டில் இருந்த குடிசை ஒன்றில் இளவரசன் இவான் ஒளித்து வைத்தான். சாம்பல் நிற ஓநாய் ஒரு குட்டிக்கரணம் போட, உடனே பேரழகி யெலேனாவாக மாறியது. இளவரசன் இவான் அதை அழைத்துக்கொண்டு அரசர் குஸ்மானிடம் சென்றான். அரசர் பெருமகிழ்ச்சியுற்று அவனுக்குத் திரும்பத் திரும்ப நன்றி கூறினார்.

''எனக்கு ஒரு மணமகளைக் கொண்டு வந்ததற்காக உனக்கு நன்றி. இளவரசன் இவான். இப்போது தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரை உன்னுடையது. கடிவாளமும் கூடத்தான்''



**இளவரசன் இவான் பேரழகி யெலேனாவையும் தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரையையும் காட்டில் ஒளித்து வைத்தான். சாம்பல் நிற ஓநாய் ஒரு குட்டிக்கரணம் போட்டு தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரையாக மாறியது**

இளவரசன் இவான் குதிரை மீதேறி பேரழகி யெலேனாவிடம் சென்றான். அவளைக் குதிரை மீது ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். அரசர் குஸ்மான் மணவிழா நடத்தி அதைக் கொண்டாட விருந்து வைத்து, நாள் முழுக்க விருந்துண்டார். தூங்குகிற நேரம் வரவும் தனது இளம் மனைவியை அழைத்துக்கொண்டு படுக்கையறைக்குச் சென்றார்.

ஆனால், அவளுடன் அவர் உள்ளே சென்றதும் தனது அழகிய இளம் மனைவியின் முகத்துக்குப் பதிலாக ஓநாயின் முகத்தைக் கண்டார். உடனே பயந்து போன அரசர் படுக்கையை விட்டு உருண்டு விழுந்தார். சாம்பல் நிற ஓநாய் பாய்ந்து எழுந்து வெளியே ஓடியது.

இளவரசன் இவானைச் சென்றடைந்து சொன்னது; ''ஏன் கவலையாக இருக்கிறாய் இளவரசன் இவான்?''

''கவலைப்படாமல் எப்படி இருப்பது? தீப்பறவைக்காகத் தங்கப் பிடரி மயிர் கொண்ட குதிரையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை''

''துயரப்பட வேண்டாம். நான் உனக்கு உதவி செய்வேன்'' என்றது ஓநாய்.

விரைவிலேயே அவர்கள் அரசர் அஃப்ரானின் நாட்டை வந்தடைந்தார்கள். 'குதிரையையும் பேரழகி யெலேனாவையும் ஒளித்து வை. நானே தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரையாக மாறுகிறேன். என்னை அரசர் அஃப்ரானிடம் நீ ஏடுத்துச் செல்' என்றது ஓநாய்.

இளவரசன் இவான் பேரழகி யெலேனாவையும் தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரையையும் காட்டில் ஒளித்து வைத்தான். சாம்பல் நிற ஓநாய் ஒரு குட்டிக்கரணம் போட்டு தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரையாக மாறியது. இளவரசன் இவான் அதை அரசர் அஃப்ரானிடம் அழைத்துச் செல்ல, அரசர் பெருமகிழ்ச்சியுற்று தீப்பறவையையும் தங்கக் கூண்டையும் அவனுக்கு அளித்தார்.

இளவரசன் இவான் திரும்பவும் காட்டுக்குச் சென்று, பேரழகி யெலேனாவைத் தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரையின் மீது ஏற்றிக்கொண்டு, தீப்பறவை இருந்த தங்கக்கூண்டையும் எடுத்துக்கொண்டு தனது அரண்மனை நோக்கிக் கிளம்பினான்.

இதற்கிடையே அரசர் அஃப்ரான் தனக்குக் கொண்டுவரப்பட்ட பரிசுக் குதிரை மீது ஏற முயன்றபோது அது சாம்பல்நிற ஓநாயாக மாறியது. மிகவும் திடுக்கிட்டுப் போன அரசர் தான் நின்ற இடத்திலேயே விழுந்தார். சாம்பல்நிற ஓநாய் அங்கிருந்து ஓடி இளவரசன் இவானோடு சேர்ந்துகொண்டது.

''இப்போது நான் விடைபெற்றுக் கொள்ளவேண்டும். ஏனெனில், இதற்கு மேல் என்னால் உன்னுடன் வரமுடியாது'' என்றது.

இளவரசன் இவான் குதிரையை விட்டுக் கீழிறங்கி, மூன்று முறை தாழ வணங்கி சாம்பல் நிற ஓநாய்க்குப் பணிவுடன் நன்றி சொன்னான்.

''கடைசியாக விடைபெற்றுக் கொள்ளவேண்டாம். ஏனெனில், என் உதவி இன்னும் உனக்குத் தேவைப் படலாம்'' என்றது சாம்பல் நிற ஓநாய்.

எதற்காக இதன் உதவி எனக்குத் தேவைப்பட வேண்டும்? என்னுடைய எல்லா ஆசைகளும் நிறைவேறி விட்டனவே என்று நினைத்தான் இளவரசன் இவான்.

தங்கப் பிடரிமயிர் கொண்ட குதிரை மீது பேரழகி யெலேனாவையும் ஏற்றிக்கொண்டு, தீப்பறவையை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். ஒரு வழியாக தன் சொந்த நாட்டிற்கு அருகில் வந்து சேர்ந்தான். உண்பதற்காக தங்க முடிவு செய்தான். அவனிடம் கொஞ்சம் ரொட்டி இருந்தது. ஆகவே, அவர்கள் ரொட்டியை சாப்பிட்டுவிட்டு ஊற்றின் புத்தம்புது நீரைப் பருகிவிட்டு ஓய்வுக்காகப் படுத்தார்கள்.

இளவரசன் இவான் தூங்கிப் போன உடனேயே அவனுடைய சகோதரர்கள் குதிரைகளில் வந்து சேர்ந்தார்கள். (தொடரும்....)

# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

அந்தக் காட்டில் பெரிய கழுகு ஒன்று வாழ்ந்து வந்தது. அது தான் வசிக்கும் மரத்தில், வேறு ஒரு கழுகு கூட இருக்கக்கூடாது என்று சட்டம் போட்டது. வயதான கழுகு ஒன்று, ''நாம் கூட்டமாக ஒன்றாக வாழ்வது தானே பலம்? ஒரு குடும்பமாக வசித்தால்தானே நன்றாக இருக்கும்? நட்பும் உறவும் பாசமும் இல்லாமல் வாழ்வது நல்லதல்ல'' என்று அறிவுரை கூறியது.

''கிழக் கழுகே...எனக்கே நீ அறிவுரை கூறுகிறாயா?எனக்குப் பிடிக்காதது பிறர் எனக்கு அறிவுரை கூறுவதுதான். என்னிடம் இருக்கும் அறிவுக்கு உங்களுக்கு வேண்டுமானால் நான் அறிவுரை கூறுகிறேன். நான் இந்த மரத்தில் தனிக்காட்டு ராஜாவாகவே வாழ விரும்புகிறேன். உயிர் மீது ஆசை இருந்தால் பிழைத்துப் போங்கள்'' என்று மிரட்டியது பெரிய கழுகு.

உடனே மற்றக் கழுகுகள் கிழக் கழுகின் தலைமையில் வேறு காட்டுக்குப் பறந்து சென்றுவிட்டன. அந்தக் கழுகு வசித்த மரத்துக்கு அருகாமையில் உள்ள புதர் ஒன்றில் ஒரு நரி இருந்தது. அது கழுகின் ஆணவப் பேச்சைக் கேட்டு, அதற்கு நல்ல பாடம் புகட்ட விரும்பியது. புதரை விட்டு வெளியே வந்த நரி, ''வணக்கம் கழுகாரே! எங்கே உன் இனத்தவர் ஒருவரையும் காணோம்?'' என்று பேச்சை ஆரம்பித்தது.

நரி கிண்டலாகக் கேட்பதைப் புரிந்துகொண்ட கழுகு, ''புதருக்குள் இருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதானே இருந்தாய்? இருந்தாலும் சொல்கிறேன், கேட்டுக்கொள். இனி நீயும் இங்கே இருக்கக்கூடாது. நான் ஒருவனே இந்தப் பகுதிக்கு உரியவன். ஒரு வாரம் தருகிறேன். அதற்குள் வேறு இடம் பார்த்துக்கொள். இல்லை என்றால்





உன்னைக் கொத்தியே கொன்று விடுவேன்'' என்று அச்சுறுத்திவிட்டு இரை தேடப் பறந்து சென்றது அக்கழுகு.

அன்று மாலை நரி மிகவும் சோகமாகக் காட்சி அளித்தது. அதைக் கண்ட கழுகு, ''என்ன நரியே, ஏன் சோகமாக இருக்கிறாய்? இடத்தைக் காலி செய்ய வேண்டும் என்று நான் கூறியதாலா?'' என்று கேலியாகக் கேட்டது.

''கழுகே, எனக்கு இந்த இடம் இல்லை என்றால் இன்னொரு இடம்! ஆனால், உனக்குத்தான் போட்டியாக அடுத்த தோப்பிலிருந்து இந்த இடத்துக்கு ஒரு திமிர் பிடித்த கழுகு வந்துள்ளது. அதுதான் கவலையாக இருக்கிறது'' என்று கழுகு நம்பும்படி பேசியது.

''எனக்குப் போட்டியாகவா? எங்கே.... எங்கே.....?'' என்று கோபத்தில் படபடத்தது பெரிய கழுகு.

''அதோ.... அந்தப் புதருக்குள்தான்'' என்று புதரைக் காட்டியது நரி.

அந்தப் புதருக்குள் முன்னரே நரி வைத்திருந்த முகம் காட்டும் கண்ணாடியைக் கழுகு பார்த்தது. அந்தக் கண்ணாடிக்குள் தெரிந்த தனது உருவத்தை வேறு கழுகு என்று அது நினைத்தது.

''ஏ... மூடக் கழுகே மரியாதையாக இங்கிருந்து ஓடிப் போ. இல்லை என்றால் உன்னைக் கொன்று விடுவேன்'' என்று கத்தியது.

''கழுகரசே.... நீங்கள் சொல்வதையே அதுவும் திருப்பிச் சொல்கிறது பார்த்தீர்களா? விடாதீர்கள். புதருக்குள்ளேயே சென்று அதைக் கொத்திக் கொன்று சமாதி கட்டுங்கள்'' என்றது நரி.

வெறியோடு கண்ணாடியை நோக்கிப் பாய்ந்த கழுகு, புதர் மீது அமர்ந்து கண்ணாடியில் தெரிந்த உருவத்தை பலம் கொண்ட மட்டும் கொத்தியது. ஒரு குழி மீது முன்னரே அந்தப் புதரை செயற்கையாக அமைத்திருந்தது நரி.

எனவே, கழுகின் பாரம் தாங்காமல் புதர் சரிய, குழிக்குள் விழுந்தது கழுகு. புதர்ச் செடிகளும் அதன் மீது விழுந்து அது மேலே வர முடியாமல் அழுத்தின. அதில் மூச்சுத்திணறி கழுகு இறந்துவிட்டது. அந்தக் கழுகினால் விரட்டப்பட்ட மற்றக் கழுகுகளை மறுபடியும் அழைத்து வந்தது நரி. அந்தக் கழுகுகளும் நரியும் முன்பிருந்ததைப் போலவே ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பணிகள்

**இலங்கையில் கிரிக்கெட் போட்டிகளே அதிகப்படியான பிரபல்யத்தைப் பெற்றுள்ள போட்டியாக கருதப்படுகின்றபோதிலும் உலக அளவில் மிகவும் பிரபல்யம் பெற்ற போட்டியாக முதலாவது இடத்தில் இருப்பது கால்பந்தாட்டப் போட்டியேயாகும்.**

இத்தனை பிரபல்யம் பெற்ற கால்பந்தாட்டப் போட்டிக்கென சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனமும் அமைக்கப்பட்டுள்ளது. 208 நாடுகள் மேற்படி சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கின்றன. இத்தனை முக்கியத்துவம் மிக்க சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் பற்றிய சில விபரங்களைப் பார்ப்போம்.





## ஆரம்பம்

1904 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைமையகம் 1932 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரிலேயே இயங்கி வருகின்றது. இங்கு உலகின் பல்வேறு வகைப்பட்ட 35 நாடுகளைச் சேர்ந்த, பல்வேறு இனங்களைச் சேர்ந்த 310 பேர் இங்கு கடமையாற்றி வருகின்றனர். இந்த சம்மேளனமானது The Federation International Football Association (FIFA) என்று அழைக்கப்படுகின்றது.

## கடமைகள்

கால்பந்தாட்டப் போட்டிகள் தொடர்பான சட்டதிட்டங்களை வகுத்தல், போட்டிகள் நடைபெறும் விதங்கள் மற்றும் போட்டியாளர்களுக்கான ஒழுக்கக் கோவைகளை ஏற்படுத்துவதும் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கடமைகளாகும். அவற்றோடு கால்பந்தாட்டப் போட்டிகளை உலகில் பிரபல்யப்படுத்தல், போட்டியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவற்றையும் இந்தச் சம்மேளனம் கவனிப்பதுடன் போட்டிகள் தொடர்பான அனுசரணை உரிமையையும் மேற்படி சம்மேளனமே கொண்டிருக்கும்.




## உறுப்புரிமை

அனைத்து நாடுகளிலும் உள்ள தேசிய கால்பந்தாட்ட சம்மேளனம் ஒவ்வொன்றும் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளத்தில் தம்மை பதிவு செய்துகொள்ளல் வேண்டும். இதுவரை இவ்வாறு 208 நாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. புதிதாக வெளியிடப்பட்ட கணிப்பின்படி உலகம் பூராவும் சுமார் 26 கோடி பேர் கால்பந்தாட்டப் போட்டிகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது உலக சனத்தொகையில் 4 % என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மேல் சபை

உலக கால்பந்தாட்ட சம்மேளனமானது கூடிய அதிகாரங்களைக் கொண்ட மேல் சபையை கொண்டிருப்பதுடன் உலகின் கால்பந்தாட்ட நாடாளுமன்றம் என்றும் இந்த சம்மேளம் குறிப்பிடப்படுகின்றது. சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் தொடர்பான அனைத்து வகை தீர்மானங்களும் இங்குதான் மேற்கொள்ளப்படுகின்றன. வருடாந்த அறிக்கையை அங்கீகரித்தல், அவ்வவ் நாடுகளின் தேசிய கால்பந்து சபையை உலக சம்மேளனத்தின் அங்கத்துவமாக ஏற்றுக்கொள்ளல், அங்கீகாரம் வழங்கல், அங்கத்துவத்திலிருந்து நீக்கிவிடுதல், சம்மேளனத்தின் தேர்தலை நடத்துதல்,தலைவரை தேர்ந்தெடுத்தல் உட்பட அனைத்தும் இந்த சபையினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

## நிறைவேற்றுக்குழு

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாகப் பணிகள் அதன் நிறைவேற்றுக் குழுவினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. தலைவர், 8 உபதலைவர்களையும் மற்றும் 15 உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இந்த நிறைவேற்றுக் குழு அமைந்திருக்கும். ஒவ்வொரு உலகக் கிண்ண போட்டிகளின் பின்னரும் அடுத்து வரும் வருடத்தில் சம்மேளனத்திற்கு புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார். 8 உபதலைவர்களும் உறுப்பினர்களும் அங்கத்துவ நாடுகளின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

## வலய மட்ட சபைகள்

ஆசியா, ஐரோப்பா, தென் அமெரிக்கா, ஆபிரிக்கா என நான்கு வலயங்களாக கால்பந்தாட்ட நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## தேசிய சங்கம்

உலகில் எல்லா நாடுகளிலும் நாட்டுக்கொரு தேசிய கால்பந்தாட்ட சங்கம் அல்லது சம்மேளனம் காணப்படும்.இதுவே சர்வதேச சம்மேளனத்தில் குறித்த நாட்டை பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கமாக இருக்கும்.

## தலைவர்

24 வருடங்கள் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளன தலைவராக இருந்த பிரேஸில் நாட்டைச் சேர்ந்த ஜோ எவலான்ஜ் என்பவரின் செயலாளராக 17 வருடங்களாக கடமையாற்றிய ஜோசப் எஸ்.பிளெட்டர் என்பவரே தற்போதைய சம்மேளனத்தின் தலைவராக இருப்பவராவார். 1998 ஆம் ஆண்டில் தலைவராக நியமிக்கப்பட்ட இவருக்கு தற்போது வயது 73. கால்பந்தாட்ட போட்டியானது உலகம் பூராவும் பிரபல்யம் பெறுவதற்கு பெரிதும் பங்காற்றியவர் இவர்.

## செயலாளர்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 49 வயதுடைய ஜெரம் வெல்கி என்பவரே 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இப்போதைய சம்மேளனத்தின் தலைவராக இருந்து வருகின்றார்.

## போட்டித் தொடர்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வருகின்ற பிரதான போட்டித் தொடர்தான் 4 வருடங்களுக்கொரு முறை நடைபெறும் உலகக்கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளாகும். இன்னும் பல சர்வதேச மட்ட போட்டிகளையும் இந்த சம்மேளனம் நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையான சிகிச்சை; காசநோயைக் குணப்படுத்தும்



காசநோய்க்கான பக்றீரியாவை இனங்கண்ட றொபர்ட் கொக்

நாம் எந்த நோய்க்கு ஆளானாலும் உரிய முறையில் சிகிச்சை பெறாவிட்டால் அது எமது உயிருக்கே ஆபத்தாகி விடலாம். அத்தகைய நிலையிலான ஒரு நோய்தான் காசநோய் (Tuberculosis-TB).

காசநோய் என்றவுடன் அனைவரும் அச்சமடைகின்றனர். ஆனால், இன்றைய நவீன மருத்துவ உலகில் இந்நோயும் ஏனைய நோய்களைப் போன்ற ஒரு சாதாரண நோய்தான். இந்நோய்க்கான அறிகுறி தென்பட்டவுடன் தொடர்ச்சியாக 6மாதங்களுக்கு உரிய முறையில் சிகிச்சை பெற்று வந்தால் இதன் தாக்கத்திலிருந்து மீண்டுவிடலாம்.



காசநோய்க்கான பக்றீரியாவின் தோற்றம்


## காசநோய் தடுப்பு

காசநோய் பல தசாப்தங்களாக மானிட இனத்தைத் தாக்கும் ஒரு நோயாக இருந்து வருகின்றது. 1940 ஆம் ஆண்டு வரை காசநோய்க்கென எந்தவிதமான சிகிச்சைகளும் இருக்கவில்லை.

அத்துடன், இந்நோய் ஏற்பட்டால் இடைவிடாத இருமல், சளித்தொற்று இருப்பதோடு, உடல் நலிவடையத் தொடங்கும். எனவே, இது சுவாசத்தொகுதி சம்பந்தப்பட்ட அபாயகரமான நோயாகவும் உடலை மெலியச் செய்யும் நோயாகவுமே அடையாளப் படுத்தப்பட்டது.

எனினும், 1865 ஆம் ஆண்டு, பிரான்ஸைச் சேர்ந்த மருத்துவ நிபுணரான யான் என்துமான் விலெமின் என்பவர் இது ஒரு தொற்று நோய் என்பதை நிரூபித்தார். இதனை அடுத்து, 1882 ஆம் ஆண்டு ஜேர்மன் மருத்துவ நிபுணரான றொபர்ட் கொக் என்பவர் காசநோயை தோற்றுவிக்கக்கூடிய 'மைகோ பக்றீரியம் டியுபக்யுலோசிஸ்' என்ற பக்றீரியாவை இனங் கண்டார். இதைத் தொடர்ந்து இந்நோய்த் தடுப்பு மருந்து அல்லது சிகிச்சை முறையைக் கண்டுபிடிப்பதற்கான தீவிர மருத்துவ ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், இந்த தீவிர ஆராய்ச்சிகளுக்கான முயற்சி 1943 ஆம் ஆண்டே வெற்றியளித்தது. சொலமன் வொக்ஸ்மன் என்ற அமெரிக்க மருத்துவ விஞ்ஞானி காசநோய்க்கான பக்றீரியாவை அழிக்கக்கூடிய



X-Ray பரிசோதனையில் காசநோய் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் விதம்

மருந்தை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அத்துடன், தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் காரணமாக 1943-1952 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மேலும் இரண்டு வகையான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த கண்டுபிடிப்புக்களை அடுத்து, காசநோய் குணப்படுத்தக் கூடிய நோய்களில் ஒன்று என்ற நம்பிக்கை உலகில் வலுவடைந்தது.

## காசநோய் என்றால் என்ன?

காசநோய் நுரையீரலைப் பாதிக்கக் கூடிய ஒரு நோயாகும். இந்நோய்க்குக் காரணமாக அமைவது 'மைக்கோ பக்றீரியம் டியுபக்யுலோசிஸ்' என்ற பக்றீரியாவாகும்.

## நோய்க்குரிய அறிகுறிகள்


- மூன்று வாரங்களுக்கு மேல் தொடர்ச்சியான இருமல்.
- சளியுடன் இரத்தம் வெளியேறல்.
- நெஞ்சு வலி.
- உணவில் வெறுப்பு.
- உடல் எடை குறைவடைதல்.
- இரவில் ஓரளவு காய்ச்சலும் கடும் வியர்வையும் அடிக்கடி ஏற்படல்.

## நோயை ஏற்படுத்தும் பக்றீரியா

- இந்நோய்க் காரணி தொண்டையில் அல்லது நுரையீரலில் கடுமையான சவ்வால் மூடப்பட்டிருக்கும்.
- மிகவும் மெதுவாகவே நோய்க்காரணி (பக்றீரியா) வளர்கின்றது.
- அடிக்கடி நோயின் தன்மையில் மாற்றம் ஏற்படலாம்.
- சில சந்தர்ப்பங்களில் நோயை அடையாளம் காண்பது கஷ்டமாகும். அறிகுறிகள் விரைவில் தென்படாது.

## நோய்த் தொற்று

குறித்த நோய்த் தொற்றுக்கு ஆளான நோயாளி இருமும் போதோ, தும்மும் போதோ அல்லது அவர் உமிழ்கின்ற சளியின் மூலமோ சுற்றாடலில் இந்நோய்க்குரிய பக்றீரியா பரவலாம். அதனூடாக ஏனையவர்களுக்கும் இது பரவுகின்றது. ஆனாலும், இந்த நோய்க் கிருமி தொற்றிய அனைவருக்கும் காசநோய் ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லை. மிகவும் குறைவான எண்ணிக்கையானோருக்கு (10% வீதத்தினருக்கு) மட்டுமே காசநோய் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.






எமது உடலில் எதிர்ப்புச் சக்தி அதிகமாக இருந்தால் நோய்க்காரணி இலகுவில் உடலைச் சென்றடைய முடியாது. எதிர்ப்புச் சக்தி அதிகம் இருக்கும்போது, மேற்குறித்த பக்றீரியா அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் அழிந்து விடுகின்றது. மாறாக, நோய் எதிர்ப்புச்சக்தி குறைவான நிலையில் இருப்பின் நோய் விரைவில் தொற்றி விடுகின்றது.

- உலகில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கணிப்பீடுகளின்படி, 3 பேரில் ஒருவருக்கு ஏதோ ஒருவகையில் இந்நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.
- இந்நோய்க்கு ஆளாகியவர்களில் பெரும்பான்மையானவர்கள் (74%) 15-54 வயதுக்கும் இடைப்பட்ட பருவத்தினராவர்.
- வருடாந்தம் 80 லட்சம் பேர் இந்நோய்க்கு ஆளாகின்றனர்.
- உலகில் எந்த மூலையிலாவது ஒவ்வொரு செக்கனுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் இந்நோயால் பீடிக்கப்படுகின்றனர்.
- ஒவ்வொரு 4 நிமிடத்திற்கும் ஒரு நோயாளி உருவாகின்றார்.
- உலகில் ஒவ்வொரு 15 நிமிடத்திற்கும் ஒரு காசநோயாளி உயிரிழக்கின்றார். இத்தகவல்களை உலக சுகாதார நிறுவனம் (World Health Organization) வெளியிட்டிருக்கின்றது.

### சுவாசத்தொகுதி தொடர்பான காசநோயின் பிரதான அறிகுறிகள்




## சிகிச்சை முறைகள்

காசநோய்க்குரிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடி சிகிச்சை பெறவேண்டும். நோய் கண்டுபிடிக்கப்பட்டால் வைத்தியர் சிபாரிசு செய்யும் மருந்து வகைகளை முறையாகவும் தொடர்ச்சியாகவும் உட்கொள்ள வேண்டும். அத்தோடு, ஒவ்வொரு குழந்தைக்கும் பிறக்கும்போது பீ.சீ.ஜி தடுப்பூசி ஏற்றத் தவறக்கூடாது.

**அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 203 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-214) |
|---|---|---|---|---|
| ஜேம்ஸ் டன்ஸ்டன், பாலர் வகுப்பு, சென்.மேரிஸ் பா.பா., பூம்புகார். | ஆர்.அபிஷேக், தரம் - 4, புனித அந்தோனியார் ஆ.ம.வித்., கொச்சிக்கடை. | இஸ்ரத் ரெய்ஹானா, தரம் - 7B, தமிழ் ம.ம.வித்., பதுளை. | ஸகியா சனூசி, தரம் - 7E, அ.மு.பா.ம.வித்., அக்குறனை. | எம்.நுவைஸ், தரம் - 9B, மின்ஹாத் தே.பாட., மாத்தறை. |

## இணைக்க 4

| புகழ் பெற்ற நூல்கள் | நூலாசிரியர்கள் |
|---|---|
| 1. மகாபாரதம் (வடமொழியில்) | 1. பிளேட்டோ |
| 2. குடியரசு | 2. அடோல்ஃப் ஹிட்லர் |
| 3. கம்பெரலிய | 3. வேதவியாசர் |
| 4. எனது போராட்டம் | 4. ரவீந்திரநாத் தாகூர் |
| 5. கீதாஞ்சலி | 5. மார்டின் விக்ரமசிங்க |

அற்லஸ் அறிவுக்கு விருந்து

**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.05.06 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 206**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## கணக்குப் புதிர் 3

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | | | = | 2 |
| | ■ | + | ■ | x |
| 3 | + | | = | |
| = | ■ | = | ■ | = |
| | x | 5 | = | 10 |

### அறிவுக்கு விருந்து 203 விடைகள்

**போட்டி: 02**

1) carpet
2) forest
3) mango
4) purse

**போட்டி: 03**

* வாங்கப்பட்ட குதிரைகளின் எண்ணிக்கை - 10 (10x1000=10,000)
* வாங்கப்பட்ட ஒட்டகங்களின் எண்ணிக்கை - 12 (12x1250=15,000)

**போட்டி: 04**

02, 05, 03, 08, 10, 01, 07, 04, 09, 06 என முறையே வசனங்களை ஒழுங்குபடுத்தினால் குட்டிக்கதை அமையும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.217 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | ■ |
| | ■ | | ■ | | ■ |
| 4 | 5 | ■ | 6 | | ■ |
| ■ | | ■ | 7 | ஸ் | 8 |
| 9 | | ■ | | ■ | |
| 10 | | | ■ | 11 | |

### மேலிருந்து கீழ்

01. குதிரை-ஒத்தகருத்துச் சொல்.
02. கடைந்த தயிர்.
03. மொசபத்தேமியா நாகரிகம் தோன்றிய நதிகளில் ஒன்று.
05. ரஷ்ய நாட்டுக்குட்பட்ட, 'தூங்கும் நாடு' என்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படும் பெரும் நிலப்பகுதி.
06 இலக்கியங்களில் பெண்களின் கண்களுக்கு ஒப்பிட்டுக் கூறப்படும் மலர்.
08. தானிய வகையொன்று.
09. ஆறு' என்றும் அர்த்தப்படும்.

### இடமிருந்து வலம்

01. இலங்கையில் 'இல்மனைட்' கிடைக்கும் இடம்.
04. (ஒரு பொருளின் மீது குறித்த திசையில்) அசைவை ஏற்படுத்தக்கூடியது.
06. இலக்கு-ஒத்தகருத்துச் சொல்.
07. பொருள்-ஒத்தகருத்துச் சொல்.
09. தந்திரகுணமுடைய மிருகமாகக் குறிப்பிடப்படுவது.
10. பிறர் நலனுக்காக எதையும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடையவர்.
11. இரும்புச்சத்துடையது; உணவாகக் கொள்ளக்கூடியது.

### குறுக்கெழுத்துப்போட்டி 214 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. பஞ்சு
02. சமர்
03. பூனை
04. தவில்
07. மாகாணம்
08. செம்பு
09. குயில்

**இடமிருந்து வலம்**

01. பஞ்சபூதம்
05. மனைவி
06. சுமார்
10. ஆணவம்
11. புனல்

குறுக்கெழுத்துப் போட்டி -217
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

ரெஜிஸ்கா சிரோமி, தரம் - 8, மோபிறே கல்., கண்டி.

எஃப்.ரிஹாமா, தரம் - 7A, ஸாஹிரா தே.பாட., கிந்தோட்டை.

பூ.சுதர்ஷன், தரம் - 9A, தமிழ் ம.வித்., ராகலை.

## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து, சொல் அமைக்க 2

அ) i n l o ________

ஆ) e e r t s d ________

இ) s u e ________


ஈ) a m s p t ________

உ) d l e o g ________

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற்குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## ஒரே மாதிரியான உருக்களில் வட்டமிடுக 1



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தேசப்பற்றுள்ள சேனை

ஒல்லாந்தர் பகல் வேளைகளில் கொழும்புக் கோட்டையைத் தாக்கினர். நட்டத்தையும் பாதிப்பினையும் ஏற்படுத்தினர். அவற்றை இரவு வேளைகளில் போர்த்துக்கேயர் சரி செய்து கொண்டனர். போர்த்துக் கேயரும் இடையிடையே கோட்டைக்கு வெளியே வந்தனர். எதிரிகளைத் தாக்கினர். அவர்களுக்கு சேதங்களை ஏற்படுத்தினர்.இந்த போர்த்துக்கேயப் படையினர் தமது தாய் நாட்டை பெரிதும் நேசித்தனர் தமது மன்னனுக்காக எந்தவொரு துயரத்தையும் வேதனையையும் அனுபவிப்பதை மகிழ்சியுடன் ஏற்றுக் கொண்டனர்.அதனால், மன உறுதிகொண்டனர். தமது உயிரையும் துச்சமாக மதித்து யுத்தம் புரிந்தனர்.

ஒல்லாந்த வர்த்தக சங்கத்தைச் சார்ந்த படை வீரர்களோ அவ்வாறு இருக்கவில்லை. அவர்கள் கூலிப்படையினராக இருந்தனர். பல்வேறு இனங்களைச் சேர்ந்த படைவீரர்கள் அதில் இருந்தனர். அதனால், ஒல்லாந்த சங்கத்தின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டு... இருக்கவில்லை. அதற்காக உயிரைத் தியாகம் செய்யவும் அவர்கள் தயாரில்லை . சம்பளத்திற்காகவே அவர்கள் சேவை செய்தனர்.

ஒல்லாந்தருக்கோ போர்த்துக்கேயரை விட அதிக படைப்பலம் இருந்தது. உதவி ஒத்தாசைபுரிய போதிய அளவினர் இருந்தனர். அகழிகள் வெட்டுவதற்காக வேண்டியளவு ஆட்களை மன்னன் அனுப்பி இருந்தான். அதனால், கோட்டை கைப்பற்றப்படுவது தாமதமாவது குறித்து பெரிதும் கவலை கொள்ளவில்லை. எனினும் தரைமார்க்கமாகவும் கடல்வழியாகவும். போர்த்துக் கேயருக்கு கிடைக்கும் உதவிகளை தடைசெய்வதே ஒல்லாந்தரின் ஒரே நோக்கமாக இருந்தது. அச் செயலானது போர்த்துக்கேயருக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. அவர்கள் உணவுண்ணாமல் பெரிதும் துயரம் அடைந்தனர். போர்த்துக்கேயத் தளபதிக்கோ அது தீராத ... மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவப் படைகள் இல்லாத நாடுகள்



உலக நாடுகளில் தரைப்படை, விமானப்படை, கடற்படை என்று முப்படைகளைக் கொண்ட ராணுவத்தினர் இருப்பதை நாம் அறிவோம். ஆனால், எந்தவொரு ராணுவப் படையும் இல்லாத 18 நாடுகள் உலகில் இருப்பது உங்களுக்குத் தெரியுமா? ஆமாம்! இது ஆச்சரியமான சங்கதி தான். ஆனால், அதுதான் உண்மை. இந்த நாடுகளில் அநேகமானவை சிறிய நாடுகளாகும். இருப்பினும், இந்த நாடுகளில் முப்படைகள் இல்லாத போதிலும் அந்நாடுகளின் பாதுகாப்புப் பணிகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இன்னும் சில நாடுகள் ஒன்றிணைந்து கூட்டாக நாட்டின் பாதுகாப்பினை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளன.





இதில் இன்னுமோர் முக்கிய அம்சம் சில நாடுகள் ஏற்கனவே ராணுவப் படைகளைக் கொண்டிருந்தபோதிலும் பல்வேறு காரணங்களினால் அந்த ராணுவப் படைகள் கலைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அரசியல், பொருளாதாரம், சமூக மற்றும் சமய விவகாரங்கள் காரணமாகவே இவ்வாறு குறிப்பிட்ட சில நாடுகளில் ராணுவப் படைகள் கலைக்கப்பட்டிருந்தன. இன்னும் சில நாடுகள் தமது நாடுகளில் ராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சிக் கவிழ்ப்புக்கள் நடைபெறக்கூடும் என்ற காரணத்தினாலும் படைகளைக் கலைத்துள்ளன.

**ராணுவப் படைகளைக் கொண்டிராத குறிப்பிட்ட 18 நாடுகளின் பெயர் பட்டியல் வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| * என்டோரா | (Andora) | * நாஊரு | (Nauru) |
| * கொஸ்டட்டரிகா | (Costarica) | * பலஹு | (Palau) |
| * டொமினிகா | (Dominica) | * செண்ட் லூஸியா | (Saint Lucia) |
| * கிரேனடா | (Grenada) | * செண்ட் வின்சண்ட் மற்றும் கிரண்டினஸ் | (Saint Vincent and the Grenadies) |
| * ஹெயிட்டி | (Haiti) | * செமோஹா | (Samoa) |
| * கிரிபெட்டி | (Kiribati) | * சொலமன் தீவுகள் | (Solomon Islands) |
| * லிபெச் டென்ஸ்டெயின் | (Leichtenstein) | * டுவலு | (Tuvalu) |
| * மார்ஷல் தீவுகள் | (Marshall Islands) | * வத்திக்கான் | (Vatican City) |
| * முறுஸியஸ் | (Mauritius) | | |
| * மைக்ரோனிஸியா | (Micronesia) | | |




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 29, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org